# பெண்மை.காம் மின் இதழ்

## புதுமையைத் தேடி...



குழந்தைகளுக்கு பொறுப்புகளை பழக்குங்கள்

ஸ்ரீ ராம நவமி

பொக்கிஷம்

Channa Recipes

மகளிர் தின சிறப்பு பக்கங்கள்

# புதுமையைத் தேடி...

**அன்பு பெண்மை தோழமைகளுக்கு வணக்கம்,**



மலர் 2
இதழ் 6

"மங்கையராய் பிறப்பதற்கே நல் மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

நம் மாதர் குலத்தைப் போற்றி பெருமைப்படுத்திய அந்த மகாகவியின் சொல் வாக்குப்படி இப்போது நாம் அனைத்துத் துறைகளிலும் நம்மை நிலைநிறுத்திக் கொண்டு நம் சாதனைகளையும் சிறப்புகளையும் பாரறிய செய்து வருகிறோம். "எங்கும் பெண் எதிலும் பெண்". பெண்களின் கால்தடம் பதியாத துறைகளே இப்போது இல்லை எனலாம். "மங்கையர் திலகம் மங்காத செல்வம்" எத்துனை உண்மையான வார்த்தைகள்.

நம் வாழ்வோடும், வரலாற்றோடும் இணைந்திருப்பவள் பெண். தாய், மனைவி, சகோதரி, மகள், தோழி இப்படி எதாவது ஒரு வடிவில், ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு உறுதுணையாகவும், பக்க பலமாகவும் இருப்பவள் பெண். அன்பு, கருணை, பாசம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட பெண்மையே இன்னும் இவ்வுலகை வாழச் செய்து கொண்டு இருக்கிறது.

"உடல்வலிமை ஆண்களுக்கு பலம் என்றால், மன வலிமை பெண்களுக்கு பலம்' என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

பெண்கள் ஆண்களுக்கு சமமாக சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுள்ளனர். இன்று பெண்கள் அரசியல், தொழில்நுட்பம், தொழில், கல்வி போன்ற பல துறைகளில் தங்களது திறமையை வெளிப்படுத்தி மேம்பட்டவர்களாக திகழ்ந்தாலும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளான பெண் சிசுக்கொலை, குழந்தை திருமணம், பாலியல் கொடுமை, வரதட்சணை போன்ற பெண் கொடுமைகள் இன்றும் தொடர்கின்றன. ஊடகங்களில் நாளொன்றுக்கு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான வன்முறையாவது பல்வேறு வடிவங்களில் அதிகரித்து கொண்டே தான் வருகின்றன. இனி வரும் காலங்களிலாவது பெண்மைக்கு எதிரான சமூகக் கொடுமைகள் களையப்பட்டு பெண்கள் சுதந்திரமாக சமூகத்தில் வளைய வர வழிவகைகள் பிறக்கட்டும்.

*– உங்கள் தோழி இளவரசி*




***நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,***
***நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,***
***திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்***
***செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;***

11



20




28



39



09



Cough & Cold Remedies 05
Stretch Marks During Pregnancy 09
Remove Pores from Face 10
Emergency Care 15
Channa Recipes 28
Penmai's Kitchen Queen 33

16 ஸ்ரீராம நவமி
19 ஸ்ரீனிவாச மங்கள ஸ்லோகம்
47 காதல் - சிறுகதை
26 திரை விமர்சனம்
39 பொக்கிஷம்
42 நீயா நானா

***The Penmai's Team***

**Administrator (நிர்வாகி) - E. Ilavarasi Johnson**
**Super Moderator (தலைமை வழிகாட்டி) - K. Parasakthi, Sumathi Srinivasan & G. Karthiga.**
**Moderators (வழிகாட்டிகள்) - Angu Aparna@Aparna, GKarti@Kartiga, JV_66@Jayanthy, Lali@Lalitha, Rudhraa and Silentsounds@Guna.**

*Designing: Karthikeyan*

*Shared contents.*
*credits goes to the rightful owner.*

*For Advertisement Please contact,*
*support@penmai.com or call us at 8344143220*

*Write us your feedback to admin@penmai.com*

Traditional Paintings @
www.MyAngadi.com

My அங்காடி MY ANGADI .com




BUY NOW
Free shipping across India
International Shipping
also Available

Call us @
83441 43220

TRADITIONAL TANJORE
PAINTINGS COLLECTION

# Cough & Cold
## remedies for children



### ...Anurad

Mix 1 tb spoon of honey with half tb spoon of pepper and give it in night. Follow this dosage for 5 days.

### ...riba

- Take few drops fresh ginger juice mix with 1 spoon of honey.
- It's a very good medicine and your child will not cough at least for 6 hrs or the whole night.
- Give 2 spoons day and night every day for 3 days.

### ...Kanibala

- Take 5-10 leaves (according to the child's age) of Karpooravalli.
- Boil the leaves for 2-3 minutes in 1/2 cup of water added with little sugar.
- Filter the leaves and feed the syrup early in the morning and evening well before dinner.
- Continue this for 3 days.

### ...Tweetypie

- Take a lime juice and add 1 spoon of honey to it.
- Drink for at least 3 - 5 days. Good medicine for cold and cough for kids

### ...Subhadramercy

- With 3 leaves of navarai/karpuravalli, grated ginger 1/2 tsp along with sugar regularly will help to drive away cold.
- For cough, mix adathoda powder with honey and drink.



### ...Deepabala

- To cure a cough quickly, make a paste of basil leaves and honey. Have a teaspoon of this. Or alternatively boil basil leaves in some water. Strain and add a little honey. Give this mixture to the child.
- To keep throat infection and cough at bay, drink basil water daily.
- Mixture of honey and ginger juice is good for sore throat. Drink one teaspoon of ginger juice mixed with an equal quantity of honey. Follow it up with a glass of warm milk.
- Mix 1 tsp of Honey with ½ tsp of grated ginger. Give this mixture to the child to get rid of a sore throat.
- For a wet cough heat ½ tsp honey and a pinch of turmeric. Let cool and then give it to the child.
- To cure a cough boil ajwain leaf for

20 minutes in some water (just enough to last for 20 minutes). Strain and give the thickest liquid to the child.

- Roast besan (gram flour) and ghee. Add this to glass of milk. This is an ideal drink to fight cough and cold.
- Apply 'throat paint' to get rid of a stubborn cough. On a thin stick wrap cotton wool. Dip this in glycerin. Ask the child to keep his mouth open and now use this 'brush' to paint the child's throat from inside.
- Soak 5 almonds overnight. To the soaked and peeled almonds add 1 peppercorn (preferably the white variety), 1 green cardamom (choti elaichi) and 1 tsp sugar. Grind to a paste and give to the child to eat.



- Steam is excellent for opening blocked nasal passages. Use plain water. Do not add anything to it as Vicks and other such additives just block up the passages more.
- To give steam to a very small child you can use one of these methods:
    - Hold the child in your lap and cover both of you with a towel to retain the steam inside. Be careful of the hot utensil and the boiling water especially for active toddlers.
    - Close all windows and doors of the bathroom. Turn on the hot water tap. Keep the child inside the bathroom for some time. You could play with the child to keep him occupied



# குழந்தைகளுக்கு பொறுப்புகளை பழக்குங்கள்!

...JV_66@Jayanthy



வீட்டில் குழந்தைகளுக்கு அவர்களது 7 வயதிலிருந்து சில சிறிய சிறிய பொறுப்புகளைக் கொடுக்கலாம், வயதுக்கு ஏற்றார் போல்.

- கடைகளிலிருந்து வரும் பிளாஸ்டிக் கவரில் உபயோகப்படக் கூடியவற்றை சைஸ் வாரியாக, அழகாக மடிக்கக் கற்றுக் கொடுத்து, அதை குறிப்பிட்ட இடத்தில் வைக்குமாறு சொல்லலாம்.
- மாலை ஆனதும், எல்லாரும் படித்து முடித்த பிறகு, செய்தித்தாளை அழகாக மடித்து, குறிப்பிட்ட இடத்தில் வைக்கச் சொல்லலாம்.
- செய்தித்தாளுடன் வரும் துண்டு பிரசுரங்களின் பின் பக்கம் காலியாக இருந்தால், அவற்றையும், கடைகளில் கிடைக்கும் பின் பக்கம் காலியாக இருக்கும் பில் இவற்றையும், ஒரு பேப்பர் கட்டர் (பிளாஸ்டிக்கால் ஆனது) வாங்கிக் கொடுத்து அதைக் கொண்டு, அந்த பேப்பர்களை, வித விதமான உபயோகப்படும் சைஸில், கட் செய்து, எல்லாரும் எடுத்து உபயோகப்படுத்தக் கூடிய இடத்தில் வைக்கச் சொல்லலாம். இந்த பேப்பர்களை, ஏதாவது லிஸ்ட் எழுதவோ, விலாசங்கள் எழுதவோ, தொலைபேசி எண் எழுதவோ உபயோகிக்க முடியும். இதனால் எந்த பேப்பர்ரையும் வீணாக்க வேண்டாம் என்ற கருத்தும் அவர்களுக்குப் பதியும்.
- எங்கு வெளியில் செல்லும்போதும், லைட், ஃபேன், டிவி, தண்ணீர் குழாய்கள் போன்றவை ஆஃப் செய்துள்ளதா என்று பார்க்கும் பொறுப்பைக் கொடுக்கலாம்.



- அவர்களது லஞ்ச் பாக்சை சுத்தம் செய்வது, ஸ்கூல் ஷூக்களை பாலீஷ் செய்வது போன்றவற்றை செய்யச் சொல்லலாம்.

முதல் சிறிது நாட்களுக்கு இவற்றை அவர்கள் செய்யும்போது நீங்கள் மேற்பார்வை பார்க்கலாம். செய்த பிறகு ஒரு முறை அவர்கள் அறியாமல் நீங்கள் ஒருமுறை திரும்ப சரி பார்க்கலாம். அவர்கள் எதை செய்தாலும் பாராட்டுவது ரொம்ப முக்கியம்.

இரண்டு குழந்தைகள் இருந்தால், பொறுப்புகளைப் பிரித்துக் கொடுக்கலாம்.

இதனால், அவர்களுக்கும் சிறு வயதிலிருந்தே பொறுப்பு வரும், நமக்கும் வேலை பளு குறையும்.

# A Parenting Checklist

*Rameshshan @ Ramesh Shanmugam*

*Article published by WHO*

**Should I breastfeed my child at night or not?**

Yes, you must do so as long as you want to. You can breastfeed in a lying-down position. Breastfeeding at night increases your milk supply because more prolactin is secreted at night than during the day. This also plays an important role in preventing another pregnancy.



**What is demand feeding? How frequently should my baby be breastfed?**

You must breastfeed whenever the baby wants to. This is called demand feeding or unrestricted breastfeeding. The more the suckling, the more breast milk will be produced. It also helps to prevent engorgement or undue fullness of your breasts.



Breast milk is digested easily and more rapidly than artificial milk. So your baby may want to feed frequently. She may feed irregularly at first; only a few times in the first day or two, then very often for several days. Every baby is different, but most settle down into some sort of rhythm after a week or two.

However, follow your instincts and recognise when your child's cries are not for a feed. This is termed 'intelligent demand feeding'.

For example, if your baby had a proper feed and then starts crying within half an hour or so, the reason is probably not hunger but something else. It could be a wet nappy. The baby may need to be wiped or may want to be picked up for more body contact. She may be feeling hot or may want to be covered up. After ruling out these possibilities, if the baby continues to cry, try nursing her again. A breastfed baby is not likely to be overfed.

# Stretch Marks During Pregnancy

...Rudhraa



## Stretch marks

Stretch marks are mainly caused by the stretching of skin due to weight gain in pregnancy. They usually appear as pinkish or reddish streaky lines on abdomen, legs, breast, thighs and hips, wherever weight is gained.

## Prevention or cure

Stretch marks are permanent, but the color will get faded after child birth (after 5-8 months).

No treatment is there to avoid the stretch marks. Nothing can be done to stop them. So it's better not to spend money on commercially available creams or lotions.

# Protein Rich Foods During Pregnancy

...Gkarti @ Karthiga



**Dairy products** are the best source of protein for pregnant women. Foods such as eggs, cheese, milk, yogurt or paneer should are taken in your diet daily.

**Seeds and nuts:** Just a handful of nuts can fulfill your daily requirements of proteins. Nuts rich in protein are almonds, peanuts, Brazil nuts, cashews, pistachios, walnuts, hazelnuts and coconuts. Seeds rich in protein are sunflower, sesame and pumpkin.

**Beans and legumes:** Many of these are very high in proteins. Mung, kidney, navy, Great Northern, black and fava beans, lentils, Split beans and chick peas are some foods that can provide protein as they're rich in it. Daily protein requirements can also be met by having Tofu and Soy products which include Soy milk and curd.

**Oats:** Although grain is not considered very high in protein but oat is one such grain which is. youmay like to eat it with pancakes, cookies or eat it solo.



# How to remove Pores from Face?

...Gkarti @ Karthiga



Black spots, Holes & Pores - Are just pimples which don't have skin around them! Because there is no skin, they're open to the air & the pop layer of junk oxidizes and turns them to dark black color. There are many remedies to remove them.

**Steaming:**

- Put your face on top of a bowl filled with steaming hot water or cover your face with a towel soaked in steam water.
- It helps in removing dirt and bacteria in your face in the form of sweat.

**Apply glue:**

- Apply normal or non-toxic glue to troubled areas and let it dry completely, peel off the dry glue and you can see black spot in the dry glue.

**Warm your skin:**

- Warming your skin makes pores to expand and making easier to squeeze blackhead out.
- You can do this after taking hot shower. Or by gently compressing the affected area with hot water.
- **Lotion:**
- Make a lotion of equal proportion of Lime juice, Almond Oil, Glycerin.
- Apply the lotion on your face and concentrate on the affected area more. It will not only cure pores and holes. But also black spots on face too.

**Some more home remedies:**

**Paste of turmeric, honey and besan:**

- Turmeric has healing properties and besan will absorb excess oil, dirt and toxins from your skin to make it clean and clear all the way.
- Honey will provide glow and smoothness to your face. Use this face pack twice a week if your skin is not very dry.
- Potato juice:
- Potato juice is very effective in removing marks from the skin. Peel a potato, grate it and squeeze some juice from it.
- Use your fingers or a cotton ball to apply this juice thoroughly over your face.
- Apply neem face pack:



- Neem has anti-bacterial and anti-fungal properties. You may apply neem face pack to get rid of pimples and acne already present over your face.
- This pack will also prevent further outburst of pimples over your face.
- Facial treatment in beauty clinics:
- Once in a month have facial done over your face by trained beauticians. After a few sessions you will notice a marked difference over your face.

# எளிமையான அழகுக்கு சில டிப்ஸ்

Durgasakthi

- சந்தனம், முல்தானிமட்டி கலந்த ஃபேஸ் பேக் உபயோகித்து வர, முகம் பொலிவாகவும், மிருதுவாகவும் மாறும்.
- கடலைமாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மிதமான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.
- ஆலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.
- பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.
- 2 ஸ்பூன் முள்ளங்கிச் சாற்றுடன் 2 ஸ்பூன் மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரிசெய்து வர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும். தேங்காய் தண்ணீரை முகத்தில் தொடர்ந்து 6 மாதம் தடவி வர சின்னம்மையால் ஏற்பட்ட வடு மறையும்.
- பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களைச் சுற்றி வைக்க, கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.



# Skin Brightening, Lightening & Whitening Tips

...Lali @ Lalitha

## Potato Facial Mask

**Ingredients:**
Potato slices

**Method:**
- Mash the potato slices into paste or make the juice of potato.
- Apply the paste on the tanned areas of your skin.
- Wash your skin after 15 mins with plain water.
- Apply potato facial mask once in a day on your tanned skin.

## Lemon Juice

**Ingredients:**
Lemon juice

**Method:**
- Apply freshly squeezed lemon juice on the affected areas of your skin.
- Leave it for 15 mins.
- Then wash your skin with cold water.







# Pencil stand of Bangles

Deepa Bala

If you have old bangles lying around in the house that nobody wears, you can use them to make a pencil stand for your desk.

**Things Needed:**
1. Old bangles
2. Adhesive
3. Cardboard
4. Scissors
5. Pencil







**Method:**

Step 1: Collect bangles of different colors but of the same size.

Step 2: Use a bangle to draw a circle on the cardboard piece. Cut it.

Step 3: Now stick one bangle on top of the other using the circular cardboard as the base for your pencil stand.

Stick the bangles till you get a height of four inches. That is it. There is no need to paint or decorate. It will be the most colorful pencil stand that you will have.

## Sloka for Kids

### Karacharna Sloka (Bedtime Sloka)



Karacharana Kritham Vaa;
Kayajam Karmajam Vaa;
Shravana Nayanajam Vaa;
Manasam Vaa Aparadham;
Vihithama Vihitham Vaa;
Sarva Medha Kshamasvaa;
Jaya Jaya Karunabdhey;
Shree Mahadeva Shambo.

### Meaning

Oh Lord! Please forgive me for all the wrong actions that I have commited knowingly or unknowingly with my hands, feet, speech, body, ears, eyes and mind. Victory to you, Oh Lord of compassion and Mercy.

HEALTH TIDBITS

# உருளைக்கிழங்கின் உடல் நலப்பயன்கள்

Shehithi @ Kasthuri

எல்லா உணவு வகைகளில் உள்ளதைவிட இதில் காரப்பொருள் அதிக அளவுடனும், உறுதியான பொருளாகவும் இருக்கிறது. இதுதான் நம் உடலில் அதிகமாய் உள்ள புளித்த அமிலங்களைச் சமப்படுத்தி அல்லது வெளியேற்றி உடலை ஆரோக்கியமாகப் பாதுகாக்கிறது.

யூரிக் அமிலத்தையும் புளித்த நீரையும் கரைத்து வெளியேற்றிவிடுகிறது. அத்துடன் சாப்பிட்ட உணவு எளிதில் ஜீரணமாக உணவுப் பாதையில் நட்புணர்வுடன் செயல்படும் பாக்டீரியாக்களையும் அதிகம் வளர்த்துவிடுகிறது.

ஊட்டச்சத்துக்குறைவால் ஏற்படும் சொறி, கரப்பான் போன்ற ஸ்கர்வி நோயைக் குணப்படுத்த உருளைக்கிழங்கு மசியலைக் சாப்பிட்டால் போதும். அவித்த உருளைக்கிழங்குகளை தோலுடன் மசித்துத் தினமும் ஒருவேளை வீதம் ஒரு வாரம் முதல் பத்து நாள்கள் வரை சாப்பிட்டால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**பச்சையான உருளைக்கிழங்கு ரசம் தரும் நன்மைகள்!**



வயிற்றுப்புண், வயிற்றுக் கோளாறுகள், குடல் கோளாறுகள், இரைப்பைக் கோளாறுகள், ஆகியன உள்ளவர்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள உருளைக்கிழங்குகளாகப் பார்த்து எடுத்து, அவற்றை பச்சையாக மிக்ஸி மூலம் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். உணவு சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக இந்தச் சாற்றில் அரை கப் அருந்த வேண்டும்.

**Nutritional Value of Potato (For 100 gms)**

| | | | |
|---|---|---|---|
| **Nutrients** | | **Electrolytes** | |
| Energy | 70 Kcal | Sodium | 6 mg |
| Carbohydrates | 15.90 g | Potassium | 455 mg |
| Protein | 1.89 g | | |
| Total Fat | 0.10 g | **Minerals** | |
| Cholesterol | 0 mg | Calcium | 10 mg |
| Dietary Fiber | 2.5 g | Iron | 0.73 mg |
| | | Magnesium | 22 mg |
| **Vitamins** | | Manganese | 0.141 mg |
| Folates | 18 mcg | Phosphorus | 61 mg |
| Niacin | 1.149 mg | Zinc | 0.33 mg |
| Pantothenic Acid | 0.279 mg | | |
| Pyridoxine | 0.239 mg | | |
| Riboflavin | 0.038 mg | | |
| Thiamin | 0.081 mg | | |
| Vitamin C | 11.4 mg | | |
| Vitamin A | 7 IU | | |
| Vitamin K | 2.9 mcg | | |

...Angu Aparna



இதுபோல், மூன்று வேளையும் உணவு நேரத்துக்கு முன்பு அருந்த வேண்டும். உருளைக்கிழங்கில் உள்ள மாவுச்சத்து, அடிவயிறு மற்றும் இரைப்பைகளில் உள்ள குழாய்கள் வீங்குவதையும் அவற்றில் நச்சுநீர் தேங்குவதையும் முன் கூட்டியே தடுத்து உடலுக்கு நன்மை செய்கிறது. இதே உருளைக்கிழங்குச் சாற்றை உடலில் எலும்பு இணைப்புகள் மற்றும் தசைப்பகுதிகளில் வீக்கம் முதலிய கோளாறுகளுக்கும், வாத நோய்களுக்கும் வெளிப்பூச்சாகத் தேய்க்க உடல் நலமுறும்.

இந்தச்சாற்றை அடுப்பில் வைத்து மூன்றில் ஒரு பங்காக வற்றச் செய்து அதில் கிளிசரின் சேர்த்து, பாட்டிலில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டும். வீக்கம், வலி ஆகியன உள்ள இடங்களில் இரண்டு அல்லது மூன்ற மணி நேரத்திற்கு ஒரு முறை இந்த தைலத்தை அழுத்தித் தேய்த்தால் ஒரே நாளில் வீக்கம் குறையும்; வலியும் நீங்கும்.

**வாத நோய் குணமாகும்!**

இரு பச்சையான உருளைக்கிழங்குகளைத் தோலுடன் மிக்ஸியில் அரைத்துச் சிறிது தண்ணீர்விட்டு, இரு தேக்கரண்டி வீதம், உணவு சாப்பிடுவதற்கு முன்பு அருந்த வேண்டும். இப்படி அருந்திய சாறு உடலில் வாதநோயைத் தோற்றுவிக்கும் அமிலத்தை வெளியேற்றிவிடுகிறது. தொடர்ந்து உட்கொண்டால் வாதநோய் முற்றிலும்  குணமாகும் சாத்தியம் அதிகம் உண்டு.

அவித்த உருளைக்கிழங்குகளின் தோல்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, ஒரு டம்ளர் தண்ணீரில் பத்து நிமிடங்கள் அடுப்பில் வைத்து இறக்கவும். பிறகு, இந்தக் கஷாயத்தை அருந்தினாலும் கீல் வாதம் குணமாகும். இந்த முறையில் தினமும் மும்முறை தயாரித்து அருந்த வேண்டும்.

**நீண்ட நாள் மலச்சிக்கல் தீர**:

கெட்டுப்போன இரத்தம், குடல்பாதையின் நச்சுத்தன்மை உள்ள அமிலம், சிறுநீரில் உள்ள புளிப்பு அமிலம் தொடர்பாக ஏற்படும் நோய்கள் உள்ளோர், நீண்ட நாள் மலச்சிக்ககால் அவதிப்படுவோர் ஆகியோர் உருளைக்கிழங்கு வைத்தியத்தை குறைந்தது ஆறுமாதங்கள் பின்பற்றினால் மேற்கண்ட நோய்களிலிருந்து பூரண நலம் பெறலாம்.

தினசரி உணவில் உருளைக்கிழங்கை அவித்தோ, வேகவைத்தோ, பொரித்தோ, சூப் வைத்தோ சேர்த்துக்கொள்வது தான் உருளைக்கிழங்கு வைத்தியம். சோறு, சப்பாத்தி போன்றவற்றைக் குறைத்துக்கொண்டு உருளைக்கிழங்குடன் கீரைவகைகளை, குறிப்பாக லெட்டூஸ், பசலைக்கீரை, தக்காளி, செலரி, வெள்ளரிக்காய், பிட்ரூட் கிழங்கு, டர்னிப் கிழங்கு போன்றவற்றையும் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.
இதன்மூலம் தோலில் உள்ள அழுக்குகளும், சுருக்கங்களும் நீங்கிவிடும். மலச்சிக்கலும் அகன்று இரத்தம் சுத்தம் செய்யப்பட்டுப் புத்தம் புது மனிதனாக ஒவ்வொரு நாளையும் சந்திக்கலாம்.

# EMERGENCY CARE

...PriyagauthamG

## Fainting

Fainting can occur in healthy people too. It can affect people of all ages, particularly common in young women. Fainting is a particular problem for the elderly people, who may suffer serious injuries from falls when they faint.

You may suffer from a simple fainting spell due to anxiety, fear, pain, intense emotional stress, hunger, or use of alcohol or drugs. Most people who suffer from simple fainting have no underlying heart or neurological (nerve or brain) problem.

In patients with overly sensitive nervous systems, straining and stress causes blood to pool in their legs. As a result, blood pressure may drop, reducing circulation to the brain. In others, their heart rate slows, sending insufficient blood to the brain, causing fainting

**Remember stress, anxiety are common causes that bring on a fainting episode.**

**Explanation:**

- The cause is low heart rate or blood pressure, leading to inadequate circulation to the brain. This results in fainting, or loss of consciousness.
- Simple faint almost always happens when the patient is standing. It is a much less common occurrence when lying down or sitting.

**How to recognise a faint?**

- Usually the first signs are paleness, sweatiness, rapid heart rate (PALPITATIONS), dizziness, or tightness in the throat. This can last anywhere from a few seconds to a few minutes. Sometime they may have nausea too. The person may complain of a sensation that the room is moving, ringing in the ears, tingling or numbness of fingertips and around lips.
- Fainting usually follows directly. This too may last a few seconds to a few minutes.
- After fainting, patients usually appear flushed, and their heart rate may be slow.

**Treatment:**

- Anyone experiencing the symptoms of fainting should lie down immediately, with their legs elevated. They should be given plenty of room and air. If possible, whatever provoked the stress or anxiety should be stopped.
- They should remain lying down until complete recovery.
- Try reviving them by putting a cold, wet washcloth on their face or neck. If they feel cold to the touch, cover them with a blanket.
- If he or she was lying down, wait several minutes before asking them to sit up. Ask them to sit for several minutes before standing. Then be prepared to support them in case they faint again when they stand.

**Prevention:**

Anyone with a history of fainting when receiving injections or having blood drawn should lie down before the procedure. They should try not to look at the needle, and their legs should be kept elevated if possible.

**Medical conditions that cause fainting apart from anxiety are:**

Heart problems such as irregular heart beats.
Seizures.
Low blood sugar (hypoglycemia).
Anemia (a deficiency in healthy oxygen carrying cells).
Problems with how the nervous system (the body's system of nerves) regulates blood pressure.
Some types of fainting seem to run in families.

See your doctor about any unexplained, especially repeated faints to rule out underlying medical conditions.

# உன்னைச் சரணடைந்தேன்

...jv_66 @ Jayanthy

நமது கடவுளர்களுக்கு எப்போதும், எல்லாரைப் பற்றியும், எவ்வளவு அக்கறை இருக்கிறது பாருங்கள். யாருடைய மனது நோவதும், அவர்களுக்கு விருப்பமில்லை.

அஷ்டமி, நவமி திதிகள் என்றாலே, எந்த ஒரு நல்லக் காரியத்திலும் இறங்காமல், இந்தத் திதிகளை மக்கள் ஒதுக்கவே, அவை இறைவனிடம் சென்று,

"மக்கள் எங்களை ஒதுக்குகின்றனரே, நாங்கள் என்ன பாவம் செய்தோம்?" என்று வருந்தினவாம். அதற்கு கருணை வடிவே ஆன இறைவன் "உங்களுக்கும் ஏற்றம் தருகிறேன். அனைத்து மக்களும் உங்கள் இருவரையும் கொண்டாடச் செய்கிறேன்" என்று வாக்களித்தாராம்.

பகவான் உறுதியளித்தபடி, **நவமி திதியில் ராமனாகவும், அஷ்டமி திதியில் கிருஷ்ணனாகவும் அவதரித்து**, மக்கள் அவ்விரு திதிகளையும் கொண்டாடச் செய்தாராம்.

ஸ்ரீராமன், சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அவதரித்தார். ஸ்ரீராமர் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதுதான் ஸ்ரீராம ஜன்மோத்ஸவம் - ஸ்ரீராமநவமி என்று நாட்டு மக்களால் விமரிசையாகக் கொண்டாடப்படும் திருநாள்.

**சரணாகதித் தத்துவம்**

ஸ்ரீராமர் என்று சொன்னாலே சரணாகதித் தத்துவம் தான் அனைவர் நினைவுக்கும் வரும். தஞ்சமென்று வந்தவரைத் தன் சரண கமலத்தில் வைத்து அபயம் அளித்தவர் ஸ்ரீராமபிரான். பாலகாண்டத்தில் இராவணனால் அல்லலுற்ற தேவர்கள் பரமனடியே பரிகாரம் என்று சரணடைந்தனர்.

அயோத்யா காண்டத்தில் பரதன், ஸ்ரீராமபிரானைச் சரணடைந்து அவர் பாதுகையை வேண்டி, அதன் மூலமே அரசாண்டான்.

ஆரண்ய காண்டத்தில் தண்டகாவனத்து ரிஷிகள் எல்லாரும் அரக்கர்களின் தாங்கவொணாக் கொடுமைகளைத் தீர்க்குமாறு ராமனைச் சரணடைந்தனர். கிஷ்கிந்தா காண்டத்தில், சுக்ரீவன் ஸ்ரீராமபிரானைச் சரணடைந்தான்.




சுந்தரகாண்டத்திலும், சீதை அசோகவனத்தில் சிறையிருந்தபோது, ஸ்ரீராமபிரானுடனான தம் இளமைக்கால நிகழ்வுகளை மனதில் அசைபோட்டுக் கொண்டிருக்கிறார். அப்போது காகாசுரன் கதை அவரது நினைவுக்கு வருகிறது. ராமபாணத்துக்கு அஞ்சி உலகெல்லாம் சுற்றிவிட்டு, இறுதியில் ஸ்ரீராமபிரானது திருவடிகளையே தஞ்சம் என்று சரணடைந்தான் காகாசுரன். அடைக்கலம் என்று வந்தவர்க்கு 'அஞ்சேல்' என்று அபயம் அளித்த ஸ்ரீராமபிரான் சரணாகதிச் சிறப்பிற்கு விபீஷண சரணாகதியைச் சிறந்த உதாரணமாகச் சொல்லலாம்.

சரணாகதியை விளக்குவதை சரம ஸ்லோகம் என்பார்கள். இராமாயணத்தில் வரும் சரண கட்டம் விபீக்ஷண சரணாகதி. விபீஷணனை ஏற்றுக்கொள்ள சுக்ரீவன் உள்ளிட்டோர் தயக்கம் காட்டியபோது ஸ்ரீராமபிரான் கூறுகிறார்...
"நான் உன்னுடையவன், என்னைக் காப்பாற்று" என்று கூறிச் சரணடைந்தவனுக்கும், அனைத்து பிராணிகளுக்கும் நான் அபயம் அளிக்கிறேன். இது என் விரதம். ஆகையால் சுக்ரீவா இவனை அழைத்துவா. இவன் விபீஷணனாக இருக்கட்டும் அல்லது அந்த இராவணனாகவேதான் இருக்கட்டும்...

இவனுக்கு அபயம் அளிக்கப்பட்டுவிட்டது" என்று திருவாய் மலர்ந்தருளுகிறார் ஸ்ரீராமபிரான்.

இராமாயணம் அல்லது சுந்தரகாண்டம் படித்தால் சகல நலன்களும் வந்து சேரும் என்ற நம்பிக்கை நம்நாட்டில் உண்டு. மணமாகாத கன்னியர் சுந்தரகாண்டத்தைப் பாராயணம் செய்தால் உடனே மணமாகும் என்பர். பல்வேறு பரிகாரங்களுக்கும் சுந்தர காண்டத்தைப் படித்து, பயன்பெருகின்றவர் பலர் உண்டு.

இராமாயணம் அல்லது சுந்தரகாண்டத்தை, அந்த நவமிக்கு முன்னர் வரும் அமாவசையன்று இதைப் படிக்க ஆரம்பித்து, பாராயணம் செய்து தசமி அன்று பட்டாபிஷேகத்தைப் படித்து முடிப்பது ஒரு வகை. ஸ்ரீராமர் பிறந்த இந்த நவமியிலிருந்து பத்து தினங்களுக்குப் பாராயணம் செய்து பட்டாபிஷேகத்தைப் படித்து முடிப்போரும் உண்டு. இராமனின் கதையைக் கேட்டாலும் படித்தாலும்



புண்ணியம் சேரும் என்பது ஆன்றோர் கருத்து.

ஸ்ரீராமபிரானை எண்ணும்போது நம் நினைவில் உடனே வருபவர் குலசேகராழ்வார். சேரமான் பெருமாளாக மன்னர் குலத்தில் ஸ்ரீராமபிரான் பிறந்த அதே புனர்பூச நட்சத்திரத்தில் உதித்தார் குலசேகராழ்வார். மன்னராயினும் ஸ்ரீராமபிரானிடம் அளவற்ற பக்தி அவருக்கு. இராமாயணத்தைக் கேட்பதில் தனி ஆனந்தம்.

ஒரு முறை வைணவப் பெரியார் ஒருவர், குலசேகரருக்கு வால்மீகி ராமாயணத்தைச் சொல்லிக் கொண்டு வந்தார். இவரும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் கங்கையெனப் பொங்கும் வண்ணம் மனம் லயித்துக் கேட்டு வந்தார். ஒருநாள் இராமபிரான் அரக்கர்களோடு போர்புரிந்த நிகழ்ச்சியை விவரித்தார் அந்த வைணவப் பெரியார்.

இலக்குமணன் வில்லேந்திக் கவசம் தரித்து இராமனிடம் வந்து, அரக்கர்களுடன் போர் புரிய விடை கேட்டான். ஸ்ரீராமரோ, "நீ சீதையைக் காத்துக் கொண்டிரு, நான் போய் அரக்கர்களை அழித்து வருகிறேன்"" என்று கூறிப் பர்ண சாலையினின்றும் வெளிக் கிளம்பி விட்டார். அதுகண்ட சூர்ப்பணகை, இவனே அரக்கர் குலத்தின் பகைவன் என்று கத்தினாள். அம்மொழிகேட்ட அரக்கர்கள் நாலாத்திசைகளிலிருந்தும் இராமபிரானைத் தாக்கினார்கள். அவர்களின் படைக்கலன்கள் இராமபிரானின் மீது பட்டு விழுந்தன" என்று கதை கூறிக் கொண்டிருந்தார் அவர்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த குலசேகரரோ அந்தக் கட்டத்தில் மனம் லயித்து, "ஆ! அரக்கர்கள் மாயப் போர் புரிவதில் வல்லவர்களாயிற்றே. கரன், தூஷணன், திரிசரன் போன்ற அரக்கர்கள் மாயத்தந்திரங்களால் தனியராய் இருக்கும் ஸ்ரீராமபிரானைத் தாக்குகிறார்களே! இப்பெரும் படையை தனி ஆளாய் இருக்கும் ஸ்ரீராமபிரான் எப்படி சமாளிக்கப் போகிறாரோ!" என்று எண்ணி, தம் படையைப் போருக்கு ஆயத்தமாகுமாறு படைத் தளபதிகளுக்குக் கட்டளையிட்டார்.

படைத்தளபதிகளோ, ஆச்சர்யம் அடைந்தனர். நம்மை எதிர்த்த சோழ,

பாண்டியர்கள் மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள். எதிரிகளே நமக்கில்லையே. பின் யார் மீது போர்? என்று குழம்பித் தவித்தனர். ஆனால் அரச கட்டளையாயிற்றே! அவர்கள் பெரும் படையைத் திரட்டித் தயாராயினர். குலசேகரரும் போர்க்கோலம் பூண்டு நிற்கையில், காரணம் அறிந்த அமைச்சர் இராமாயணக் கதை சொல்லிக் கொண்டிருந்த அப்பெரியாரை அழைத்து, இச்சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டினர்.

அப்பெரியவரும், "ஸ்ரீராபிரான் தனியொருவராக நின்று, மாயங்கள் புரிந்த அரக்கர்களை அழித்து வெற்றி வாகைச்சூடி, பர்ணசாலையடைந்தார். சீதாதேவி எம்பெருமானின் மார்பில் பட்ட புண்களுக்கெல்லாம் மருந்தாக அவரைத் தழுவி மகிழ்ந்தாள்" என்று கதையைச் சொல்லி ஸ்ரீராம பட்டாபிஷேகம் வரை, சொல்லி முடித்த பிறகே குலசேகரர் தெளிவு பெற்றார். தம் படையை மீண்டும் தத்தம் இடம் திரும்புமாறு கட்டளையிட்டு அரண்மனை திரும்பினார்.

ஸ்ரீராமாயணக் கதை கேட்டாலும் மனம் லயித்துக் கேட்டால் தான் அதன் அருமையும் பலனும் நமக்குக் கிடைக்கும். எங்கெல்லாம் ஸ்ரீராமாயணம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேயரும் அமர்ந்து கதை கேட்பார் என்பது பெரியோர் வாக்கு.

வேடனான குகனையும், வானரனான சுக்ரீவனையும், அரக்கனான விபீஷணனையும் தம் சகோதரர்களாக ஏற்றவர் ஸ்ரீராமர். ஒரே வில் (பாணம்), ஒரே சொல், ஒரே இல் (மனைவி) என்று வாழ்ந்து காட்டிய ஸ்ரீராமபிரானின் வழியில் சிந்தித்து சுகம் பெறுவோமே!



**ராமநவமி அன்று கடைபிடிக்க வேண்டியவையும் பூஜை செய்யும் விதிமுறைகளும்:**
ஸ்ரீராம நவமியன்று வீடுகளில் மாவிலை கட்டுவர் மாக்கோலம் போடுவார்கள். ராமநவமி அன்றுகாலை எழுந்து நீராடி, பூஜை அறையை சுத்தம் செய்து அலங்கரித்து, பட்டாபிஷேக ராமர் படத்திற்கு பூச்சூடி, பொட்டு வைத்து பூஜைகள் செய்யப்படும். நைவேத்தியங்கள் படைத்து ராம நாமம் சொல்லி பூஜிக்க வேண்டும்.

ஸ்ரீராமர் பிறந்தது நன்றாக அனல் கொளுத்தும் வெய்யில் காலத்தில். எனவேதான் ஸ்ரீராம நவமியன்று பானகம், நீர் மோர், வடை பருப்பு, விசிறி போன்றவற்றை தானமாகக் கொடுப்பதுண்டு. ஸ்ரீராமர் பிறந்ததை தசரதர் அரண்மனையில் கோலாகலமாகக் கொண்டாடினார். "மக்களுக்கு நிறைய தான தர்மங்கள் செய்தார். அதை மனதில் கொண்டு இன்றும் கிராமங்களில் பல வீடுகளில் நெல் மணிகளும் பணமும் வைத்து தானமளிப்பது வழக்கமாக உள்ளது.

ஸ்ரீராமர் விசுவாமித்திர முனிவருடன் இருந்த போதும், ராமர் 14 ஆண்டுகள் வன வாசம் இருந்த போதும், நீர் மோரையும், பானகத்தையும் தாக சாந்தியாக அருந்தினாராம். அதனால் ராம நவமியில், ராமனுக்கு நீர் மோர், பானகம் படைப்பது முக்கியம்.

ஸ்ரீராம நாமம் ஜெபிப்பதும், ராம நாமத்தை பிறர் சொல்லக்கேட்பதும், ஸ்ரீராம பிரானுடைய திருநாமத்தை எழுதுவதும் மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கும். ராமாயணம் படிக்க இயலாதவர்கள், 'ஸ்ரீராம... ஸ்ரீராம' என்று சொன்னாலே ராமாயணம் படித்த புண்ணியம் கிடைக்கும்.

மாலையில், பானகம் (வெல்லம், ஏலக்காய், கிராம்பு ஆகியவை கலந்த நீர்), நீர் மோர், ஊற வைத்த பயத்தம் பருப்பில், தாளித்துக் கொட்டி உப்பு கலந்து வைப்பது , இவற்றை கடவுளுக்குப் படைத்து விட்டு நாம் உண்ணலாம். அது வரை உபவாசம் (நாள் முழுவதும் வேறு எதுவும் உண்ணாமல் இருப்பது) இருக்கலாம்.

அன்று, ஸ்ரீராமஜெயம் எழுதுவது, மற்றும் உபவாசம் இருப்பது இரண்டும் மிக மிக விசேஷம். அன்று ஒரு நாள் இதைச் செய்வது, 24 ஏகாதசி அன்று செய்வதற்குச் சமம் (ஏகாதசி அன்று விரதமிருந்தால் மிகவும் விசேஷம்).

# ஏழ்மை விலக, சகல ஐஸ்வர்யங்களும் கிட்ட பலன்தரும் ஸ்லோகம்

Datchu @ Mythili

## ஸ்ரீ ஸ்ரீநிவாச மங்கள ஸ்லோகம்



**ஸ்ரீய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தினாம்**
**ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்**
**ஸ்ரீ வேங்கடாசலாதீஸம் ஸ்ரீயாத்யாஸித வக்ஷஸம்**
**ஸ்ரிதசேதன மந்தாரம் ஸ்ரீநிவாஸமஹம் பஜே**

**பொருள்:** திருவேங்கடமலையில் வாசம் செய்யும் ஸ்ரீயப்பதியான ஸ்ரீநிவாஸப் பெருமாளே, நமஸ்காரம். அனைத்து மங்கலங்களையும் அளிப்பவரே, வேண்டும் வரங்களையெல்லாம் வழங்குபவரே, மதிப்பிட முடியாத பெரும் புதையல் போன்றவரே நமஸ்காரம். மகாலட்சுமி வசிக்கும் அழகு மார்புடையவரே, துதிப்போர் அனைவருக்கும் கற்பக விருட்சம்போல நன்மைகளை பொழிபவரே, ஸ்ரீநிவாஸா, நமஸ்காரம்.

(புரட்டாசி சனிக்கிழமைகளில் இத்துதியால் ஏழுமலையானைப் பாடி வணங்க, ஏழ்மை விலகி, சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும். தவிர புதன், சனி கிரக பாதிப்புகளும் விலகும்).



## தமிழ் மந்திரம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிகிடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

### SPIRITUAL NOTEBOOK

**மார்ச்**
14, 28 - பிரதோஷம்
16 - ஹோலிப் பண்டிகை
20 - சங்கடஹர சதுர்த்தி
22 - சஷ்டி
12, 27 - ஏகாதசி
30 - அமாவாசை
31 - யுகாதி

**ஏப்ரல்**
5 - சஷ்டி
8 - ஸ்ரீராம நவமி
11 - ஏகாதசி
12 - பிரதோஷம்



# Penmai's Special Women's Day Contest

பெண் இல்லாத வீடு பாலைவனத்திற்கு சமம். அது பாழடைந்ததாகவே தோற்றமளிக்கும். வீட்டில் ஒரு பெண் இருந்தாலே லக்ஷ்மிகரமும் கலகலப்பும் நிறைந்திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆண் வேலை தொடர்பாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளியே சென்று களைத்து வீடு திரும்பும்போது அவரை அரவணைத்து உணவு, தேநீர் கொடுப்பதற்கு வீட்டில் ஒரு பெண் நிச்சயமாகத் தேவை. அது தாய், சகோதரி, மனைவி அல்லது மகளாகக்கூட இருக்கலாம்.

குடும்பத்திற்கு பெண் முக்கியமானவளாக இருக்கின்றபோதும் அவளுக்கு வெளியே பாதுகாப்பு இல்லை. அவள் எத்தனையோ ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது. அவற்றிற்கெல்லாம் பயந்து வீட்டில் ஒளிந்து இருக்காமல் எதிர்நோக்கும் அத்தனை ஆபத்துக்களையும் தடைகளையும் தாண்டி துணிவுடன் கல்வியில் மட்டுமல்ல தொழிலிலும் பல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறாள். அவற்றைப் பார்க்கும்போது நானும் பெண்ணாக இருப்பதில் மிகவும் பெருமையாக இருக்கிறது.

**Gowri Mohan**

*In my view she has the creating power and demon power. So she can do anything possible with her beneficial qualities.*

*I feel proud to be a women because we have the will power more(example my mom she has proved things possible, she faced so many difficulties and by God's grace now we are in good position)*

*I am a daughter to my parents and sister to my brother. According to my knowledge home maker is the best role.*

**Jash @ Saradheya**

*Women belong to that gender that is born and nurtured with several unique gifts. I am Proud to be a woman and in my view, we, women can be proud of being:*

***More compassionate:***
*Women are more kind and patient by nature itself. They can relate to the hurt and pain suffered by others and will go to any lengths to offer relief to them.*

***Emotionally stronger:***
*Women are emotionally stronger when compared to men. From a very early age, they face several kinds of difficulties internally and externally that make them strong. This ability gives them the power to face any kind of challenge.*

***Able to give birth to a new being:***
*Women have the unmatchable blessing of giving life to another being. One, whom she cares the most for, sacrifices the most for, loves the most, gives the most and forgives the most. Her child is an extension of her being, perhaps the most important part of herself.*

***Able of multitasking:***
*Women are multifaceted. They can climb the peak, happily run empires and even rule nations. At the same time, they are the best judge at the home front as well. They know best what their family requires and attending to their needs is their most important priority.*

***Pillars of strength:***
*Women are pillars of strength providing moral, emotional, or financial support to self and people around them. Single moms are more common than a single father, very lucidly demonstrating their ability to handle multiple things without deriving external support.*

***Able to rise again and fight:***
*Women are sensitive and they are easily disappointed or hurt. But they have the immense power to emerge just like a Phoenix does. She weathers any storm and instills faith in herself to succeed any situation.*

*Which role of women impressed in your life and why?*

***It's undoubtedly being a mother. A divine and incomparable feel that can't be expressed in words, the bond between a mother and her child is the most beautiful and the strongest one in the World. A phase where I realised that joy knew no bounds. One smile from her can make me the happiest person on the Earth,***

***DeepaBala***

பெண்ணாகப் பிறந்ததைப் பெருந்தவப்பயனாகக் கருதுகிறேன் நான்.

மகளாகப் பிறந்து என் பெற்றோரைப் பெருமைக்கு உரியவர்கள் ஆக்கினேன். என் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அவர்கள் பெருமை கொள்ளுமாறு நடந்து கொண்டு இருக்கிறேன்.

மனைவியாகி, என் கணவருக்குச் சிறந்த மந்திரியாகவும், தோழியாகவும், மற்றொரு தாயாகவும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், என்னை நினைத்து மகிழவும், பெருமை கொள்ளவும் தகுந்தவளாகவும் நடந்து கொண்டு வருகிறேன்.

புகுந்த வீட்டில், வெளி உறவினர் அனைவரும், இப்படி ஒரு மருமகளை அடைய நீங்கள் மிகவும் கொடுத்து வைத்து இருக்க வேண்டும் என்று கூறும் அளவுக்கு, நடந்து கொண்டு வருகிறேன்.

இவை எல்லாவற்றின் சிகரமாக, என்னுடைய மகனுக்கு ஒரு சிறந்த தாயாக, அனைவருக்கும் எடுத்துக்காட்டாக, இருப்பதையே, என் வாழ்க்கைப் பயனாகக் கருதுகிறேன். அவனுடைய ஒவ்வொரு செயலைப் பார்க்கும் அனைவரும், "எப்படிப்பட்ட வளர்ப்பு உன் தாயினுடையது " என்று மலைக்கும் அளவுக்கு இருப்பதையே மிகவும் பெருமையாக உணர்கிறேன்.

ஒவ்வொரு முறையும் அவன் "அம்மா" என அழைக்கும் போதும் காதில் தேன் பாய்வது போல் உணர்ந்து பெருமிதம் அடைகிறேன். அன்னையே ஒரு குடும்பத்தில், அனைவருக்கும்பாலமாக விளங்குகிறாள். ஒரு சிறந்த அன்னையால் மட்டுமே, சிறப்பான குடிமக்களை நாட்டிற்கு அளிக்க முடியும்.

ஆகவே, "மங்கையாகப் பிறந்ததற்கு மாதவமே செய்து இருக்கிறேன் என்ற பெருமையுடன், "தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை " என்ற கூற்றை மெய்ப்பிக்கும் சந்தர்ப்பம் கிடைக்க, அந்தக் கடவுளுக்கும், இதைக் கூறதளம் அமைத்துக் கொடுத்த "பெண்மை"க்கும் என் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறேன்.

*jv_ Jayanthy*

என்னுடைய பார்வையில் பெண் என்றால்...

நான் நல்ல தோழியாக,என் அம்மாவுக்கு மகளாக,என் கணவனுக்கு மனைவியாக, அண்ணனுக்கு பாசத் தங்கையாக,தங்கைக்குச் செல்ல அக்காவாக இருப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இதை அனைத்தயும் விட என் குழந்தைகளுக்குச் சிறந்த தாயாக இருப்பதே மனநிறைவும் மகிழ்ச்சியும் சேர்ந்து தருகிறது.

எந்தப் பெண்ணும் தாயாக மாறிய பின் முழுமை அடைகிறாள். தாய்மையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

எல்லா உறவிலும் மேலோங்கி இருப்பது தாய்மையே என்பது என் கருத்து.நட்பிலும் தாய்மையைக் காணலாம்.அண்ணனுக்குத் தங்கையாக மட்டுமல்லாமல், தாயாக பாசம் காட்ட முடியும்.தாய்மை என்பது பெண்ணுக்கு மட்டும் உரியது இல்லை.ஆண்களிடமும் தாய்மை உணர்வு காணப்படுகிறது.
என் தாயைப் பற்றி நான் எழுதிய வரிகள்
இங்கு சமர்ப்பிக்கிறேன்.

சுமங்கலியாக இருந்த போது வர்ணிக்க எனக்கு வயது இல்லை... இன்று உன் புற அழகை வர்ணிக்கவில்லை அக அழகை வர்ணித்தேனே...
உன் தாய்மையை வர்ணிக்க வார்த்தைகள் என்னிடம் இல்லையம்மா!

கடவுளின் மறு உருவமாய் வந்தவளே
தந்தை பாசம் அறியாமல் வளர்த்தாயே
தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தவளே!
தளரா நெஞ்சம் உடையவளே!

நீ பாடிய தாலாட்டை உனக்கு நான் பாடி மகிழ்ந்தேனே!
தோல் சுருங்கி கைகள் நடுங்கினாலும்
உன் மடி மீது தலை சாய்த்தால்

அன்பாய் தலை கோதும் உன் வருடலுக்கு இணை ஈடில்லையம்மா!(உண்மைதானே இந்த வரிகள்) எனக்குத் தெரிந்த வகையில் பெண்ணை பற்றியும் ,பெருமைகளையும் கூறியுள்ளேன்.

தாய்மையைப் போற்றுவோம்! முதுமையில் கைவிடாமல் துணை வருவோம்!!

*Priyachandran*

என் குலத்தைப் பற்றி எழுதும் வாய்ப்பு... நழுவ விடுவேனா?

பெண் என்னைப் பொறுத்தவரை,
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்...
நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்...என்பது போல்,
பெண் இல்லா வாழ்வே பாழ்...என்பதே என் எண்ணம்.

பெண் என்பவள் ஆக்க மட்டுமே தெரிந்த பிரம்மா.எதுவுமே இல்லாத இடத்தில் கூட சுயம்புவாய் எழும் சக்தி கொண்டவள்.எத்தனை முறை வீழ்ந்தாலும் பீனிக்ஸ் பறவையாய் எழுந்து நிற்கும் ஆற்றல் படைத்தவள்.

நவரசங்களிலும், பல கலைகளிலும், பல வேலைகளிலும் ஜொலிப்பவள்தான் பெண்.இங்கே சொன்னது எடுத்துக்காட்டுகள் மட்டுமே. சொல்லாமல் விட்டவர்கள் கோடிகோடியாய்.

அந்த சிவனுக்கே தாயுமானவன் என்ற சிறப்பு பெயர் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.தன்னைச் சுற்றி உள்ள அனைத்தையும் அழகாக ஆக்கும் ஆற்றல் படைத்தவள் பெண். அத்தகு பெருமை வாய்ந்த பெண்ணாக இருப்பதில் மிகவும் பெருமையே!

என் வாழ்வில் என்னை மிகவும் கவர்ந்த பெண் என் தாய் தான்.
"ஆசப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்...
அம்மாவை வாங்க முடியுமா..." இந்த வரிகளை அடிக்கடி பாடி என் தாயின் புன்னகையை பரிசாக வாங்குவதில் அத்தனை இன்பம் எனக்கு. எவ்வளவு நிதர்சனமான உண்மை?

"விதைத்தவன் உறங்கலாம். ஆனால் விதைகள் உறங்குவதில்லை" இந்த விதைகளுக்கு ஒப்பாக என் தாயைத்தான் நிச்சயம் உதாரணம் சொல்வேன். ஒரு விளக்கு சுடர் விட்டு எரியத் தூண்டுகோல் எவ்வளவு அவசியமோ, அதைப் போல் என் வாழ்க்கையின் தூண்டுகோலாக என் தாயைத்தான் பார்க்கிறேன். "அம்மா, உன் மூச்சை சுவாசித்து, உன் இரத்தத்தை உறிஞ்சி, உன் உணவை உண்டு, பிரசவிக்கும் போது உயிர் பிரிந்தால் ஏற்படும் அளவிற்கு வலி ஏற்படுமாம், எனக்காக மறுபிறவி எடுத்திருக்கும் தாயே, சாவை எட்டிப்பார்த்து விட்டு வந்து, என்னை இந்த உலகை எட்டிப்பார்க்க வைத்தாயே, நூறு முறை பிறந்தாலும், நூறு முறை இறந்தாலும் நான் பட்ட கடன்தீராது தாயே... என் உயிர் பிரியும் வேளையிலும் உன் மடிதான் வேண்டும் தாயே..."

பல வருட நினைவுகளைத் திரும்பிப் பார்க்கவும், என்னைப் படைத்த கடவுளுக்கும், என் தாயிற்கும் நன்றி கூறும் சந்தர்ப்பத்தை அளித்த பெண்மைக்கு கோடி நன்றிகள்.
"மங்கையராய் பிறக்க மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற கவிமணியின் கூற்றை என்றும் நினைவு கூர்ந்து நல்வழியில் நடப்போம். மகளிர் தின வாழ்த்துக்கள்.
நன்றி! பெண்மை வளர்க நின் பணி, வாழ்க நின் புகழ்!!!

*Geetha.A @ Anu*

பெண் அசாதாரணமானவள்; அன்பானவள்; ஆளத்தெரிந்தவள்;ஆளப்பிறந்தவள்; அடக்கத் தெரிந்தவள்; அடங்கவும் அறிந்தவள்; கேலி, கிண்டல், சீண்டல்அனைத்தையும் தாண்டிசாதிக்கப் பிறந்தவள்; சாதனை அரசியவள்

பெண்ணாகப் பிறந்ததற்குப்பெருமைப்பட ஒன்றல்ல, இரண்டல்லபல நூறு காரணங்கள். அத்தனையும் பகர்வதுஅடக்கமாகாது; தன்னடக்கமாகாது. எனவேமாதிரிக்கு ஒன்று... ஒன்றே ஒன்று... அதுவும் நன்றே நன்று,அதுதான் 'தாய்மை' என்னும் மூன்றெழுத்து மந்திரம்

தங்கையாக, தமக்கையாக,தாயாக, உயிர் நண்பியாகயார் வேண்டுமானாலும் இருக்கலாம். ஏன் ஒரு ஆண் கூட அந்தப் பாத்திரஙளை இட்டு நிரப்பலாம்.ஆனால் மனைவி என்னும் பாத்திரத்தைஅவள் ஒருவள் மட்டுமேஏற்க முடியும்.ஒருவனுக்கு ஒருத்திஅந்த ஒருத்திதான்என்றும் என்னை ஈர்க்கிறாள்.

**JayanthiRamani**

*Women – As a well known Tamil adage says “Pengal Naam Naatin Kangal” which means women are the eyes of our country.*

***A question arises now why they are referred to as eyes?***

*Eyes helps us to see the entire world but it could not see its own, in the same way women are the symbol of dedication who used to work and dedicate themselves for their dear and near ones but never care for themselves. Eyes are the master piece of God's creation as they are the first part to replicate the navarasas like anger, happiness etc. In the similar way women are the one who identifies and react to the navarasas of their close ones and trying to find solutions for others if needed. Simply we can refer woman to a candle who spread limelight to their surroundings by melting themselves.*

***What makes you feel to proud about women?***

*First and foremost, in the olden age women are considered to be fit for doing house hold activities and men for earning money, but time has now changed women to do both i.e Sivasakthi, Siva while earning money and Sakthi while doing house hold activities. Still we have Sivasakthi's all over the country who can manage both office and home.*

*Another boon to women is motherhood. When referring to Tamil saying “KoduppathuElithuPaathukappathuKadinam”, Even though it's not possible without men, the entire 10 months of time make her ahead of men as she is the one who turns a tiny microscopic sperm in to an identifiable human.*

***Which role of women (Like a mother, sister, a friend, wife) impressed in your life and why?***

*I would say playing the role of all are easy except wife and mother. Woman is used to the role of daughter when she is born and she is used to the role of a friend, sister when she is growing up.*

*All people in this world are struggling and working hard and finally their final motive is to get food for their hunger. But being a lady, once she is married she gets promoted as their husband's Mrs. and she is the one who sacrifices that food habit and adapts to her husband's style. We can compromise that too. Being a mother is really harder of all as she can easily play all the other roles once seeing it from others and*

*practising it but mother's role cannot be played but it should be felt by heart and it impressed me a lot now after being a mother of a cute and sweet 5 month old kid. To conclude I really felt the meaning of motherhood today that too at the time of preparing this, as my daughter laya, started saying AMMA for the first time today.*

***VishnupriyaRamsrinath***

*It's all in the Sun of her Smile, the Sparkling in her Eyes. Yeah She is Strong, Bold & Unabashed. On this Lovely Women's Day, I've a Rhyme on women quality... Yeah,*

***Persistence is the ornament She must wear,***
***Forbearance is the weapon She'd bear,***
***Genteel is the word She'd hear,***
***Submissiveness is the important deal with her Beloved.***

*Well, I'd say She has the Greatest Power..Ie To forgive & TO Love again. You May argue that she's good Memory & will keep even the silly things in her mind forever. Yeah I agree, but that does not Pause her from loving you. She might remind you about the past incidents, but that is how she loves you after all she has forgiven you. Don't you remember your mother forgiving you with a sweet kiss when you indulge in naughty deeds?? Doesn't that cute forgiveness from your little daughter makes your realize life better??*

*Yeah, if You deem about it, "To forgive" is the Greatest Power a Woman is blessed with.. If She'd not have that power, this World would have been a bitter place to live..!*

*Despite the Fact that a Woman has Such a great Potential, Who is the one,, Who is responsible for all the Misery faced by Women in the name of hatred for Girl Child, Female Infanticide, Harassment for dowry, Looking down at Women who cannot conceive and all the Contemptible social Evils aimed against woman?? It is none other than a woman herself! Women keep fighting and arguing to give them rights.. As a woman, we'd be aware of our own strengths and make use of it to create a positive environment for ourselves and for other women. Take pride in being a woman. Look at other women with the same pride..Yeah Just Like Live and let live!!*

*We Keep Using the words Gender Equality, Women Empowerment & Reservation Bills, but in practicality we hardly find these in the Society.. We feel proud of our rich culture where women occupies a high place and used to get her due respect which gradually faded in the course of time and presently Atrocities against Women are on the increase.. It would be really nice if our people try to revive this rich culture of ours and strive to make the society a safer place for women.*

*Women's Day is living life with self-respect and with honor. This is not a reward but a matter of right to women. This will always keep tormenting the minds of women. . We will have to work every day for the education and security of girls. Education is vital the most in this context. The day will be the Women Empowerment Day on which celebrating the Women's Day will be stopped altogether. Let us all hope and await to wake up in the dawn of a new World, where the society renders true respect and equality to women from which she has been deprived of all these years!!*

*From Beauty to Power, a woman has got it all. Engaging so many Parts, she certainly is one of a kind.. Let us salute the Woman who is Loving, Beautiful, Caring, Intelligent & Brave; the Woman who is Strength, Knowledge & Prosperity.. Let us salute the unique woman..!*

*Yeah Last but Not the Least, A Woman is Nothing but Nature Personified.*

***Gkarti***

# கோலி சோடா

...Geetha A @ Anu

அன்புள்ள நண்பர்களே!!

வணக்கம். நலம்தானே? மீண்டும் ஒரு திரைவிமர்சனத்தில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. எத்தனையோ திரைப்படங்கள் வந்தாலும், ஏதாவது ஒரு சிலப் படங்களே நம்மை உற்சாகப் படுத்துகிறது ஒரு சினிமாவாக. அந்த வரிசையில் நாம் பார்க்கப் போகும் படம் கோலி சோடா. வாங்க படத்தைப் பார்க்கலாம்.

நான்கு வயசுப் பசங்க சேர்ந்து ஒரு விஷயத்தை நமக்கு சொல்லும் படம்தாங்க இது. கோயம்பேடு சந்தையில் மூட்டைத் தூக்கும் அனாதை இளைஞர்கள். இவர்கள் எந்த ஒரு இலட்சியமும் இல்லாமல் சம்பாதிப்பதை செலவு செய்கிறார்கள். நன்றாக ஒற்றுமையாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வழிகாட்டியாகவும், வேலை கொடுப்பவருமாக வருகிறார் ஆச்சி. இவர்கள் இருவருக்கும் நல்ல பாசப் பிணைப்பும் இருக்கிறது. சந்தையில் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கும் நாயுடு என்பவர் செல்வாக்கான ஆள். இந்த நான்கு பேருக்கும் வேலைக் கேட்டு ஆச்சி நாயுடுவிடம் கூட்டிச் செல்கிறார். நாயுடு வேலை இல்லை, ஆனால் என்னிடம் கடை ஒன்று இருக்கிறது. அதை வேண்டுமானால் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார். நல்ல உணவகம் இல்லாததால், இவர்கள் அனைவரும் சேர்ந்து உணவகம் ஆரம்பிக்க முடிவெடுக்கிறார்கள்.




இளைஞர்களும் மிக சவாலாக எடுத்து ஆச்சி டிபன் சென்டர் ஆரம்பிக்கிறார்கள். நன்றாக விற்பனை சூடுபிடிக்கிறது. நாயுடுவின் மச்சான் ஒரு நாள் கடைக்கு வர, அவன் அங்கேயே தண்ணி அடிக்க ஆரம்பிக்க, இவர்களுக்கு வியாபாரம் அடி வாங்குகிறது. இதை சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கிறார்கள். ஒரு நாள் சண்டையில் மச்சானை அடித்து விட, நாயுடுவிற்கும், இளைஞர் கூட்டத்திற்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டு நான்கு பேரையும் வெவ்வேறு ஊர்களுக்கு கடத்தி விடுகிறார்கள். இவர்கள் நான்கு பேரும் இணைந்தார்களா? தேட நினைத்த தங்கள் அடையாளத்தை நாயுடுவை எதிர்த்து மீட்டார்களா? என்பதே மீதி கதை.

# கோலி சோடா



பசங்க படத்தில் நடித்த சிறுவர்களை இந்த படத்த்தில் பெரியவர்களாகக் காட்டி இருக்கிறார்கள். நான்கு பேரும் தங்கள் நடிப்பைச் சிறப்பாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆச்சியுடன் இருக்கும் பிணைப்பாகட்டும், இந்த வயதில் முக்கியமாக வரும் காதலாகட்டும், (அது இல்லாம தமிழ் படமா?) தங்கள் தோழியாக வரும் ATM இடம் காட்டும் அன்பாகட்டும், நாயுடுவுடன் போடும் சண்டையாகட்டும், மச்சானுக்கு சமைக்கும் போது தவிப்பதாகட்டும் எல்லாமே தூள்.

அது யாருங்க அந்த சோடா புட்டி. நல்ல தேர்வு. தன் தந்தையிடம் அடிவாங்கும் போதாகட்டும், ஒரு செடி... ஒரு பூ என்று காதல் வசனம் பேசுவதாகட்டும், தன் நண்பர்களை ஒன்று திரட்ட பாடுபடுவதாகட்டும் தன் திறமையை நன்றாக வெளிப்படுத்தி இருக்கிறார் சீதா. சாந்தினி அழகான புன்னகையால் வசீகரிக்கிறார்.

ஆச்சியாக வரும் சுஜாதா, அங்கங்கே நகைச்சுவையில் நம்மை சிரிக்க வைக்கும் மந்திரவாதியாக இமான் அண்ணாச்சி மற்றும் நம் பவர் ஸ்டார் மற்றும் பலர் இருக்கிறார்கள்.



# கொண்டைக்கடலை மசாலா

...Ramyaraj



**தேவையானப் பொருட்கள்:**

வெள்ளை கொண்டைக்கடலை - 1 கப் (ஊற வைத்தது)
பெரிய வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது)
தக்காளி - 1 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி பூண்டு விழுது - 3 ஸ்பூன்
மிளகாய் தூள் - தேவையான அளவு
சன்னா மசாலா - 2 ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
கொத்தமல்லி - சிறிது
கசூரி மேத்தி - 1 ஸ்பூன்

**செய்முறை:**

- வெள்ளை கொண்டைக்கடலையை குக்கரில் வேக வைத்து கொள்ளவும்.
- வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், அதில் கடுகு தாளித்து, பின் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.
- வெங்காயம் நன்றாக வதங்கியதும், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து சிறிது நேரம் வதக்கி பின்பு அதில் தக்காளியைப் போட்டு வதக்கவும்.



- சன்னா மசாலா, மிளகாய் தூள், உப்பு அதோடு சிறிது நீர் சேர்த்து
- அதில் வேக வைத்த கடலையையும் போட்டு கொதிக்கவிடவும்.
- அதில் இருந்த நீர் எல்லாம் வற்றியவுடன், நறுக்கிய கொத்தமல்லி மற்றும் கசூரி மேத்தியை தூவி இறக்கவும்.

**குறிப்பு:**

- விருப்பமிருந்தால் இதில் எலுமிச்சை சாறு சேர்க்கலாம்.

# சன்னா - கீரை மசாலா

...jv_66 @ jeyanthy

**தேவையானப் பொருட்கள்:**

சன்னா - 1 கப்
விருப்பமான கீரை - 1 கட்டு
தக்காளி (பெரியது) - 2
பூண்டு - 4 பல்
மிளகாய் தூள் - 2 டீஸ்பூன்
மஞ்சள்தூள் - ¼ டீஸ்பூன்
தனியாத்தூள் - 1 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
எண்ணை - 4 டீஸ்பூன்

**தாளிக்க:**

சீரகம், பட்டை.

**செய்முறை:**

- சன்னாவை ஊற வைத்து குக்கரை சிம்மில் வைத்து நன்றாக வேக வைத்துக் கொள்ளவும். சிறிதளவே தண்ணீர் சேர்த்து வேக வைக்கவும்.
- விருப்பமான கீரையை நன்றாக அலசி, பொடிப்பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
- தக்காளியை ஓரளவு பெரிதாக நறுக்கிக்கொள்ளவும்.
- ஒரு கடாயில், எண்ணெய் விட்டு, சீரகம், பட்டை இரண்டையும் போட்டுத் தாளித்து, அடுப்பை சிம்மில் வைத்து, அதிலேயே மிளகாய் தூள், மஞ்சள்தூள், தனியாத்தூள் ஆகியவற்றைச் சேர்க்கவும். பூண்டை நன்றாக நசுக்கிச் சேர்க்கவும்.
- தக்காளியைச் சேர்க்கவும்; உப்பைச் சேர்க்கவும்; நன்றாக வதக்கவும்.
- இப்போது பொடியாக அரிந்த கீரையைச் சேர்த்து, சிம்மில் வைத்து, நன்றாக வதக்கவும்.
- இவை வதங்கிய பிறகு, வேக வைத்த சன்னாவை நீருடன் சேர்த்துக் கிளறவும்.
- சேர்ந்தார் போல் வரவேண்டும் என்றால், அதன் மீது சிறிதளவு சோளமாவு அல்லது கோதுமை மாவு தூவி, ஒரு நிமிடம் கழித்து, இறக்கிப் பரிமாறவும்.சப்பாத்திக்கு சிறந்த சைட்டிஷ் இது.



# Channa Pulao

...Devithilak

**Ingredients:**

Basmati rice
Channa (white)
Onion
Ginger garlic paste
Green chilli
Channa masala powder
Lemon juice
Coriander leaves (chopped)

**To temper:**

Oil/ghee - 2 tbsp
Cinnamon - 1 small piece
Cloves - 2
Cardamom - 2
Bay leaf - 1
Star anise



- **Method:**
- Soak channa over night. Soak basmati rice for 30 minutes before cooking.
- Slice onion lengthwise and slit green chillies. Heat a small pressure cooker with oil/ghee and temper with the items given under 'To temper' table.
- Add onion, green chillies and fry till transparent. Add ginger garlic paste.
- Fry until raw smell goes away, but make sure not to over fry/burn it. Add channa masala powder and give a quick stir.
- Add soaked rice drained from water, soaked channa and add salt. Mix well.
- Add 1 1/2 cups of water and bring to boil. Keep in lowest possible flame and cook for 12-14 minutes. You can also pressure cook for 2 whistles in medium flame.
- Once done open the cooker, add chopped coriander leaves and lemon juice if desired and mix gently.
- Serve with raitha.



# Easy Channa Sundal

...Deepika Mahesh

**Ingredients:**
Channa - 1 cup
Salt - To taste

**To Grind:**
Coconut
Green chilly - 3

**For tempering:**
Oi l – 1 tsp
Mustard seeds - 1/4 tsp
Urad dhal - 1/2 tbsp
Curry leaves - Few stings



**Method:**

- Soak channa overnight and pressure cook it for 3 whistles.
- Grind coconut and green chillies coarsely keep aside.
- Heat the kadai, add oil and the ingredients for tempering.
- Later add the cooked channa dhal, grinded coconut.
- Finally add salt.

# Channa Soup

**Ingredients:**
Channa - 1/4 cup
Onions - 1/4 cup
Potato - 1 medium cubed
Masoor dhal – 1 tbsp (If you don't have masoor dhal, you can use toor dhal, I tried with both but masoor dhal gives more taste)
Tomatoes - 1/2 cup
Oil -1 tbsp
Cumin seed powder - 1 tsp (roasted)
Garlic - 1 tsp
Hot water - 3 cups
Coriander leaves - 2 tbsp

**Method:**

- Soak channa overnight.
- Heat the oil in a pressure cooker; add the onions and garlic saute till the onions are translucent.
- Add the channa, masoor dhal, cumin powder, potatoes and tomatoes with 3 cups of hot water, add salt.
- Mix well and pressure cooks it for 3 whistles.
- Allow the steam to escape for opening the lid.
- Add coriander leaves and serve hot.



# கொண்டைக்கடலை குழம்பு

...Ramyaraj

**தேவையானப் பொருட்கள்:**

வெள்ளை கொண்டைக்கடலை - 1 கப் (ஊற வைத்தது)
கத்திரிக்காய் - 4
பெரிய வெங்காயம் - 2 (பொடியாக நறுக்கியது)
தக்காளி - 2 (நறுக்கியது)
பூண்டு - 10 பல்
புளி - சிறிது
குழம்பு மிளகாய் தூள் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
கொத்தமல்லி - சிறிது



**செய்முறை:**

- வெள்ளை கொண்டைக் கடலையை குக்கரில் வேக வைத்துக் கொள்ளவும்.
- வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், அதில் கடுகு, வெந்தயம் தாளித்து, பூண்டை போட்டு வத்தக்கவும். அது வதங்கியதும், வெங்காயம் போட்டு வதக்கவும். பின்பு அதில் தக்காளியைப் போட்டு வதக்கவும்.
- அது நன்றாக வதங்கியவுடன் அதில் நறுக்கிய கத்திரிக்காயைப் போட்டு வதக்கவும்.
- பின்பு அதில் குழம்பு மிளகாய் தூள், உப்பு அதோடு சிறிது புளித் தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும்.
- கொதித்ததும் குக்கரில் வேக வைத்த கடலையோடு, இதையும் கலந்து, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து 2 விசில் வைக்கவும்.
- உங்களுக்கு விருப்பம் என்றால், சிறிது தேங்காய் அரைத்து ஊற்றலாம். கடைசியில் கொத்தமல்லி தூவி இறக்கவும்.
- இது, சாதம், சப்பாத்தி, இட்லி, தோசை எல்லாவற்றிற்கும் நன்றாக இருக்கும்.



**குறிப்பு:**

- குழம்பு மிளகாய் தூள் என்பது (சிவப்பு மிளகாய், தனியா, க.பருப்பு, சீரகம், மிளகு) எல்லாம் சேர்த்து அரைத்தது.

# சிக்கன் குழம்பு

**தேவையானப் பொருட்கள்:**

சிக்கன் - 1/2 கிலோ
சின்ன வெங்காயம் - 200 கிராம்
மல்லி விதை - 100 கிராம்
சீரகம் - 3 டீஸ்பூன்
மிளகு - 5
வரமிளகாய் - 5 to 7
கறிவேப்பிலை
பூண்டு - 1
இஞ்சி - 1 இஞ்ச்
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
கொத்தமல்லி தழை - சிறிதளவு
எண்ணெய் - வதக்க



**செய்முறை:**

- சின்ன வெங்காயத்தை தோல் உரித்து முழுதாக வைத்துக் கொள்ளவும்.
- இஞ்சி மற்றும் பூண்டை அரைத்து எடுத்துக் கொள்ளவும்.
- சிக்கனை அளவான துண்டுகளாக வெட்டி நன்றாகக் கழுவி எடுத்துக் கொள்ளவும்.
- ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு, சீரகம், கருவேப்பிலை, மிளகுபோட்டு தாளித்த பின், உரித்து வைத்துள்ள வெங்காயம் மற்றும் 5 பூண்டு வில்லைகள் சேர்த்து நன்கு பொன்னிறமாக வதக்கி தனியே எடுத்துக் கொள்ளவும்.
- பின் மல்லி மற்றும் வர மிளகாய் இரண்டையும் வறுத்து தனியே எடுத்துக் கொள்ளவும்.
- இப்பொழுது, வறுத்து வைத்துள்ளவற்றை ஒன்றாகப் போட்டு மைய அரைத்து எடுத்துக் கொள்ளவும்.
- பிறகு, ஒரு குக்கரில் எண்ணெய் விட்டு காய்ந்ததும், கடுகு, கறிவேப்பிலை போட்டு தாளித்த பின்பு இஞ்சி பூண்டு விழுது போட்டு பச்சை வாசனை போகும் வரை வதக்கிய பிறகு கழுவி வைத்துள்ள மட்டன் துண்டுகளைப் போட்டு அரை உப்பு சேர்த்து 5-லிருந்து 10 நிமிடங்களுக்கு வதக்கிய பின்பு அரைத்து வைத்துள்ள மசாலா மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து சிக்கன் வேகும் வரை குழம்பைக் கொதிக்க வைக்கவும்.
- குழம்பு கொதித்ததும் இறக்கி கொத்தமல்லி தழைத் தூவி பரிமாறவும்.

**குறிப்பு:**

- விருப்பமானால், மசாலா அரைக்கும் பொழுது தேங்காயையும் சேர்த்து அரைத்துக் கொள்ளலாம்.



# மிளகு குழம்பு



**தேவையானப் பொருட்கள்:**

புளி - எலுமிச்சை அளவு
மிளகு - 1 1/4 டீஸ்பூன்
வரமிளகாய் - 2 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 1 டீஸ்பூன்
துவரம்பருப்பு - 1 டீஸ்பூன்
பெருங்காயம், உப்பு - தேவையான அளவு
வெல்லம் (தேவையானால்) - சிறிதளவு
பூண்டு - 4 பல்
நல்லெண்ணெய் - 3 டீஸ்பூன்
கடுகு - தாளிக்க
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

- ஒரு வாணலியில், மிளகு, வரமிளகாய், இரண்டு பருப்புகள், ஆகிவற்றை, பச்சை வாசனை போக வறுத்துக் கொண்டு, மிக்சியில், நன்றாக அரைத்துக்கொள்ளவும். நீர் விட்டும் அரைத்துக்கொள்ளவும்.
- பூண்டை இதனுடன் சேர்த்தும் அரைத்து கொள்ளலாம். இல்லாவிட்டால், அப்படியே நசுக்கி, குழம்பில் போட்டும் கொதிக்க விடலாம், விருப்பமில்லாதவர்கள் பூண்டு சேர்க்காமலும் செய்யலாம்.
- அதே வாணலியில்,கடுகு, பெருங்காயம் தாளித்து, புளியைக் கரைத்து ஊற்றி, உப்புசேர்த்துக் கொதிக்க விடவும்.
- இப்போது அரைத்து வைத்துள்ளவற்றைஅந்த புளித்தண்ணீரில் சேர்த்துநன்கு கொதிக்க விடவும்.
- நன்றாக சேர்ந்து வரும்போது,விருப்பமுள்ளவர்கள் சிறிதளவு வெல்லம் சேர்த்துக் கொள்ளவும். மேலும் சிறிது கொதித்தவுடன், இறக்கி வைத்து, கறிவேப்பிலையை நறுக்கி போடவும்.
- ரொம்பக் காரமாக இருக்கும் என்று தோன்றினால், வெல்லம் சேர்க்கவும்.
- இது மருத்துவ குணம் கொண்ட குழம்பு. மாதம் ஒரு முறையாவது இதைச் செய்து உண்பதால் நமது வயிறு சுத்தமடையும். விஷங்களை முறிக்கும் தன்மையுடையது மிளகு என்பதை நீங்கள் அறிவீர்கள்.



# உருளைக்கிழங்கு பூண்டு வறுவல்

**தேவையானப் பொருட்கள்:**

உருளைக்கிழங்கு - 1/2 கிலோ
பூண்டு பல் - 5
சோம்பு -1/4டீஸ்பூன்
மஞ்சள் தூள் - 1/4 டீஸ்பூன்
மிளகாய் தூள் - 1 டீஸ்பூன்
தனியா தூள் - 1/2 டீஸ்பூன்
கரம் மசாலா தூள் - 1/2 டீஸ்பூன்
உப்பு தேவைகேற்ப

**தாளிக்க:**

எண்ணெய் -5 டேபிள் ஸ்பூன்
கடுகு - 1/4 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 1/2 டீஸ்பூன்
கருவேப்பில்லை - சிறிதளவு



**செய்முறை:**

- முதலில் பூண்டு பல், சோம்பு இரண்டையும் சேர்த்து நன்றாக நசுக்கி வைத்துக் கொள்ளவும்.
- உருளைக்கிழங்கை நன்றாகக் கழுவி சிறிய துண்டுகளாக நறுக்கி வைக்கவும்.
- அடுப்பில் வாணலியை வைத்து 4 ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகை போட்டு பொரிந்ததும் உளுத்தம்பருப்பு போட்டு பொன்னிறமானதும் கறிவேப்பிலை, நசுக்கி வைத்துள்ள சோம்பு, பூண்டு சேர்த்து வாசனை வரும் வரை வதக்கி, சிறிய துண்டுகளாக நறுக்கி வைத்த உருளைக்கிழங்கையும் போட்டு நன்றாக வதக்கவும்.
- பிறகு மஞ்சள்தூள், மிளகாய்தூள், தனியாத்தூள், உப்பு சேர்த்து சிறிது தண்ணீர் தெளித்து நன்றாக கலந்து மூடிபோட்டு அடுப்பை மிதமான தீயில் வைத்து வேக விடவும். நடு நடுவில் கலந்து விடவும்.
- உருளைக்கிழங்கு நன்றாக வெந்ததும் கடைசியில் கரம்மசாலா தூள், மீதி இருக்கும் ஒரு ஸ்பூன் எண்ணையை சுற்றிலும் விட்டு நன்றாக கலந்து பொன்னிறமாகும்வரை வறுத்து எடுக்கவும்.
- இப்பொழுது சுவையான உருளைக்கிழங்கு பூண்டு வறுவல் தயார்.
- இந்த வறுவல் எல்லாவகையான கலந்த சாதம், சாம்பார் சாதம்,தயிர் சாதத்துடன் சேர்த்து சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.



# Murgh Makhani

**Ingredeints:**
Chicken with bones - 3/4 kg

**For marinating Chicken:**
Ginger garlic paste -1 1/2 tsp
Red chilly powder-1 tsp
Lemon juice - from 1 lemon
Thick yoghurt - 2 tbsp
Butter - 2 tbsp (can use spread like lurpark or olivio too)
Egg white -1
Corn flour - 1 tbsp
Salt - To taste
Kuzambhupodi ( chilly /dhania powder )- 2 tsp (I used Kuzambupodi only because I did not have enough dhania powder for the whole dish)

**For Makhani Gravy:**
Ginger garlic paste -2 tsp
Boiled onion paste - 1/2 cup
Tomato puree – 11/2 cup
Red chilly powder – 1tsp
Roasted jeera powder -1 tsp
Roasted dhania powder -1 tsp
Kashmiri chilly powder - 1 tsp
Garam masala powder - 1/2 tsp
Cream- 1/4 cup
Kasoorimethi - 1 tbsp
Butter - up to 3 tbsp



**Tadka**
Oil -2 tsp
Elaichi -5
Cinnamon- 2 small pieces
Jeera - 1/2 tsp

**Method:**
- Clean the chicken.Pat dry. If pieces are too big slash the flesh to facilitate marinating.
- In a bowl add the ingredients listed for marinating. Mix well.Now add the chicken and smear until well coated.
- Leave it for up to 4 hrs. If left overnight even better.
- Preheat oven at 200 *C.
- Place the well marinated chicken pieces on a lined baking tray. Bake for about 15- 20 mins or until juice runs clear. Turn in between and baste with some butter or spread (optional).
- This in itself can be served like Tandoor chicken with salad and Dip as a starter.

**For the Makhani Gravy Preparation:**
- Boil some onion -- make a smooth paste.
- Make some tomato puree - Boil water add the tomatoes. After few mins. you'll be able to peel skin. Remove the seeds and puree the Blanched deskinned tomatoes.
- Using a nonstick pan helps a lot as this gravy consumes a lot of oil /Butter.



**Method:**
- Heat a non stickkadai.Add oil and tadka with ingredients mentioned.
- Add onion pure, cook until golden brown.
- Add ginger garlic paste and cook until raw smell disappears.
- Now add half the butter. Add chilly, dhania, jeera, garam masala and Kashmiri chilly powders.
- Simmer well and cook without burning the spices.
- Add tomato puree and cook until oil separates.
- Now add the Oven cooked chicken pieces and coat it well in gravy.
- Crush the Kasoorimethi and finally add the cream and mix well.
- Lastly add the other half of butter retained for a glossy look.
- Serve with Naanor Ghee rice or Peas pulao.

# முட்டைக்குழம்பு

**தேவையானப் பொருட்கள்:**
முட்டை - 4 (வேக வைத்தது)
சின்ன வெங்காயம் - 10 (தோல் உரித்தது)
சோம்பு - சிறிதளவு
பட்டை
கிராம்பு
கசகசா
தேங்காய் - 1 கப்
இஞ்சி - சிறிதளவு
பூண்டு - 3 அல்லது 4 பல்
மிளகாய் தூள்
தனியாத் தூள்
மஞ்சள் தூள்
கொத்தமல்லி தழை



**செய்முறை:**

- தேங்காய், பட்டை, சோம்பு, கிராம்பு, கசகசா, இஞ்சி, பூண்டு, மிளகாய் தூள், தனியாத் தூள், மஞ்சள் தூள், வெங்காயம் இவற்றை மிக்சியில் மையாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.
- வாணலியில் எண்ணெய் விட்டு, பட்டை(மிகச் சிறியது), கிராம்பு (1), தக்காளி(பாதி) வதக்கி, அரைத்து வைத்துள்ள விழுதை அதில் சேர்த்து நன்கு கொதிக்க விடவும். தண்ணீர் மற்றும் உப்பு தேவைக்கு ஏற்றவாறு சேர்த்துக்கொள்ளவும்.
- நன்கு கொதித்து பச்சை வாடை போன பின்னர் வேக வைத்த முட்டையைச் சேர்த்து சிறிது நேரம் கொதிக்க விடவும். கொத்தமல்லி தழையைச் சேர்த்து இறக்கவும்.
- சாதம், தோசை, இட்லியுடன் இந்தக் குழம்பு வைத்து சாப்பிடலாம்.



# பாஸ்போர்ட் கிரெடிட் கார்டு

Guna @ Silentsounds

## பாஸ்போர்ட்!




**யாரை அணுகுவது?**
மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள்.

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?**
காவல் துறை சான்றிதழ், பழைய பாஸ்போர்ட் நகல், 20 ரூபாய் முத்திரைத்தாளில் விண்ணப்பம்.

**எவ்வளவு கட்டணம்?**
ரூ.4,000/-

**கால வரையறை:** இந்தியாவில் தொலைத்திருந்தால் 35-லிருந்து 40 நாட்கள்; வெளிநாட்டில் தொலைத்திருந்தால் அதிக காலம் எடுக்கும்.

**நடைமுறை:** பாஸ்போர்ட் தொலைத்த பகுதியில் உள்ள காவல் துறையில் புகார் அளித்து கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற சான்றிதழ் வாங்க வேண்டும். 20 ரூபாய் முத்திரைத்தாளில் தொலைந்த விவரங்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். இவற்றில் நோட்டரி பப்ளிக் ஒருவரின் கையெழுத்து பெற்று மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அவர்கள் விசாரணை மேற்கொண்ட பிறகு நகல் பாஸ்போர்ட் அனுப்பி வைத்துவிடுவார்கள்.

## கிரெடிட் கார்டு!




**யாரை அணுகுவது?**
நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை மையம்.

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?**
தொலைந்துபோன கிரெடிட் கார்டு தொடர்பான விவரங்கள்.

**எவ்வளவு கட்டணம்?**
ரூ.100/- (நிறுவனத்துக்கேற்ப வேறுபடும்).

**கால வரையறை:** 15 வேலை நாட்கள்.

**நடைமுறை:** கிரெடிட் கார்டு தொலைந்ததும் உடனடியாக வாடிக்கையாளர் சேவை மையத்துக்கு தகவல் அளித்து பரிவர்த்தனைகளை நிறுத்த வேண்டும். தொலைந்த கார்டுக்கு மாற்றாக வேறு கார்டு அளிக்கக் கோரினால் பதினைந்து வேலை நாட்களுக்குள் உங்களுக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். அடையாளச் சான்று காண்பித்து வாங்க வேண்டும்.

# பொக்கிஷம்

...ஏகன் @ Arunkumar S.K



ஒரு மழைக்காலம்; மாலை நேரம். அப்போது நான் சிறுவன் மிகச் சிறுவன். பள்ளியில் எனது வகுப்பறையில் அமர்ந்திருந்தேன். எங்கிருந்தோ ஈசல் கூட்டம் எனது வகுப்பறைக்குள் வந்து வட்டமிடத்துவங்கி சிறிது நேரத்தில் சென்றும் விட்டது. அப்போது எனது ஆசிரியர் சொன்னார், 'ஈசலின் வாழ்நாள் ஒரு நாள்' தான் என்று. எனக்கு மிகுந்த ஆச்சர்யம் உண்டாயிற்று. அது எப்படி ஒரே நாளுக்குள் என்ன செய்து விட முடியும்? அப்படி ஒரு நாளை மட்டும் கடவுள் ஏன் அதற்குக் கொடுக்க வேண்டும்? என்று கேள்விகள் தோன்றின. இன்னும் என்னன்னவோ தோன்றியது.

என் ஆசிரியர் அதற்கான காரணங்களைச் சொன்னார். ஆச்சர்யமாய் இருந்தது. அன்றே வீட்டிக்குச் சென்று என் அம்மாவிடம் எனக்குப் பள்ளியில் தோன்றிய கேள்விகளைக் கேட்டேன்.

அம்மா பள்ளிக்குச் செல்லவில்லை ஆகவே அறிவியல் தெரியாது; என் கேள்விக்கான விடையும் தெரியாது. எனக்குத் தெரிந்த விடையைச் சொல்லி பெருமை கொள்ளலாம் என்று அம்மாவிடம் கேட்டேன்.

விடை தெரியாமல் போனாலும் என் அம்மா ஒன்று சொன்னார் "கடவுள் இந்த உலகத்துல யாரையும் எதையும் காரணம் இல்லாம படைக்கவில்லை, நாம தான் அதைக் கண்டு புடிக்கணும் டா". எனக்கு சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. நமக்கு ஈசலின் வாழ்நாள் சிறிதாக இருக்கிறது. ஆனால் இருபத்திநான்கு மணி நேரம் என்பது அதற்கு பெரிதாக உள்ளது. ஆமையின் ஆயுள் முந்நூறு ஆண்டுகள், அதனைப் பொறுத்த வரையில் மனிதனால் அறுபது ஆண்டுகளில் என்ன செய்து விடமுடியும் என்றே சிந்திக்கும். வாழ்க்கை என்பது மணி நேரத்திலோ வருடத்திலோ அல்ல செய்கையின் விளைவில் உள்ளது.

ஈசல் தன்னை கண்டுபிடித்ததா, ஆமை தன்னை உணர்ந்ததா என்று தெரியாது. ஆனால், என்னால் என்ன செய்ய முடியும் என்று நான் உணரவே இந்த வாழ்க்கை என்று உணர்ந்தேன். அந்த பதில் என் வாழ்வைப் புரட்டிப் போட்டது.

பின் இளம் வயதில் எல்லோருக்கும் தோன்றும் ஆன்மீகக் கேள்வி எனக்கும் தோன்றியது. "நான் யார்?" விடை தேடித்தேடி அலுத்துப் போனேன். மீண்டும் என் அம்மாவிடம் வந்தேன். இந்த முறை இவளுக்கு விடை தெரியாது. காரணம் உலகமே அதற்கான விடையைத் தானே தேடுகிறது? இருந்தாலும் கேட்டேன்.



அதற்கு அம்மா "நாம யாருன்னு நமக்குத் தெரியாது ஆனா எதுக்குப் பொறந்தோம்னு நம்ம மனசுக்குத் தெரியும்" என்றாள்.

"ச்சே! அம்மா என்பவள் புத்திசாலியா என்று தெரியாது... ஆனால் பொக்கிஷம்!" என்று தோன்றியது.



எதற்குப் பிறந்தேன் என்ற கேள்வியின் நீட்சியாக, எனக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? எப்படி மற்றவர்களிலிருந்து வேறுபடுகிறேன் நான்? எனக்கு என்று தனிப்பட்டத் திறமைகள் உள்ளதா? எனக் கேள்விகள் நிற்காமல் ஓடியது. விடை புரியாமல் திரிந்தேன். காலங்கள் ஓடியது. கேள்வி மட்டும் கிணற்றில் விழுந்த கல்லாய் என்னுள் தங்கி விட்டது.

என் வீட்டிற்கு வந்த சித்தி, என் அம்மா மிகவும் ஆசையாய் வாங்கி வைத்திருந்த புடவையைக் கண்டதும் “அக்கா நான் இத எடுத்துக்கட்டுமா” என்றாள். உடனே என் அம்மா சிந்தியாமல் ‘சரி’ என்றாள்.
எனக்கு நடப்பது ஒன்றும் புரியவில்லை. உலகே மாயம் என்று சொல்லுமளவு சிந்தனை சிறகடித்தது. பின், தனிமையில் “ஏன் அம்மா உன் புதுப் புடவையை ஏன் கொடுத்தாய்? உனக்குப் பிடிக்குமே” என்றேன். “என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்” என்று வெகு சாதாரணமாக மிகப்பெரும் தத்துவத்தை சொல்லிவிட்டு நகர்ந்து விட்டாள்.

அப்போது எனக்கு விடை கிடைத்தது. நம்மால் முடிந்ததை செய்வதற்கே இறைவன் நம்மைப் படைத்திருக்கிறார் என்று.

என்னை என் திறமையை நான் முழுமையாக பயன்படுத்திக்கொண்டேனா, உலகிற்கு பயனுள்ள வாழ்வை வாழ்கிறேனா, எனக்கு சுவாசம் தரும் இவ்வுலகிற்கு என்ன செய்தேன். என்னைச் சுற்றியுள்ள நண்பர்களில் தொடங்கி அண்டை வீட்டார், ரயில் பயணத்தில் எனக்கு உதவி செய்த பெயர் அறியா மனிதர், நான் தடுக்கி கீழே விழுகையில் “புள்ளைய பாத்துக்காம என்னம்மா யோசனை” என்று என் சொந்த தாத்தா போல உரிமையோடு என் அம்மாவைக் கடிந்து கொண்ட அந்த பெரியவர், என்றோ ஒரு நாள் மிட்டாய் வாங்கிக் கொடுத்ததை நினைவில் வைத்துக்கொண்டு தன் அப்பா வாங்கி வந்த கேக்கை என்னோடு பகிர்ந்து கொள்ள ஓடி வந்த பக்கத்து வீட்டு சிறுமி. எனக்காய், என் வீட்டிற்காய் நாட்டின் எல்லையில் முகம் அறியாத பலர் இருக்கிறார்கள். என் ஊரைப் பாதுகாக்கும் போலீசார் என என்னை நெகிழச் செய்த இந்த உலக மக்களுக்கு நான் என்ன செய்தாலும் போதாது. இருந்தாலும் என்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று உணர்ந்தேன்.

ஒரு நாளைக்குள் செய்து முடிக்க ஈசலுக்கு ஏதோ ஒன்று இருக்கிறது என்றால், அறுபது ஆண்டுகள் வாழும் நமக்கும் ஏதோ ஒன்று உள்ளது தானே? ஆனால் அந்த ஏதோ பிறருக்காக.

‘உனக்கு மட்டுமே வாழ்ந்தது போதும். இனி எல்லோருக்காகவும் வாழ்’ என்று அம்மா சொல்லாமல் சொன்னாள். தத்துவங்கள் என்பது பெரிய நூலகத்தின் பழைய புத்தகத்தில் ஏதோ ஒரு வரிக்குள் ஒளிந்து இருக்கும் என்ற எண்ணம் தவறு. அது நம் வீட்டிலேயே உள்ளது. உலகின் மிகப் பெரிய தத்துவங்கள் எல்லாம் மிக எளிமையானதாம். அப்படித்தான் உலகின் உயரிய பொக்கிஷம் நம் வீட்டில் உள்ளது என்று புரிந்தபோது, எல்லாம் புரிந்தது.



**குறள் பால்: அறத்துப்பால்**
**குறள் இயல்: இல்லறவியல்**
**அதிகாரம்: விருந்தோம்பல்**

**86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்வருந்து வானத் தவர்க்கு.**
**விளக்கம் :**
வந்த விருந்தினரைப் பேணி, வரும் விருந்தை எதிர்பார்த்து இருப்பவன் மறுமையில் வானத்தவர்க்கு நல்ல விருந்தினன் ஆவான்.
**Explanation :**
He who, having entertained the guests that have come, looks out for others who may yet come, will be a welcome guest to the inhabitants of heaven.

**87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்.**
**விளக்கம் :**
விருந்தினரைப் பேணுவதும் ஒரு யாகமே. அதைச் செய்வதால் வரும் நன்மை இவ்வளவு என்று அளவிட முடியாது; வரும் விருந்தினரின் தகுதி அளவுதான் நன்மையின் அளவாகும்.
**Explanation :**
The advantages of benevolence cannot be measured; the measure (of the virtue) of the guests (entertained) is the only measure.

**88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்.**
**விளக்கம் :**
விருந்தினரைப் பேணி, அந்த யாகத்தின் பயனைப் பெறும் பேறு அற்றவர். செல்வத்தைச் சிரமப்பட்டுக் காத்தும் அதனை இழக்கும் போது, இப்போது எந்தத் துணையும் இல்லாதவராய்ப் போனோமே என்று வருந்துவர்.
**Explanation :**
Those who have taken no part in the benevolence of hospitality shall (at length lament) saying, "we have laboured and laid up wealth and are now without support."

**89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.**
**விளக்கம் :**
செல்வம் இருந்தும் வறுமையாய் வாழ்வது விருந்தினரைப் பேணாமல் வாழும் மடமையே. இது மூடரிடம் மட்டுமே இருக்கும்.
**Explanation :**
That stupidity which exercises no hospitality is poverty in the midst of wealth. It is the property of the stupid.

**90. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**
**விளக்கம் :**
தொட்டு மோந்து பார்த்த அளவில் அனிச்சப்பூ வாடும்; நம் முகம் வேறுபட்டுப் பார்த்த அளவில் விருந்து வாடும்.
**Explanation :**
As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away.

# நீயா நானா

...Surya

**கடந்த மாதம் நடைபெற்ற நீயா நானாவின் தீர்ப்பும் அதில் சிறப்பாக பேசியவற்றின் மேற்கோள்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**
**மகிழ்ச்சியான மணவாழ்க்கை அமைவது காதல் திருமணத்திலா? பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணத்திலா?**

**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்பு உடை நெஞ்சம்தாம் கலந்தனவே!**
என்பது நம் தமிழ் குறுந்தொகை வழக்கு. அன்பு கொண்ட நெஞ்சம் எந்த சூழலிலும் பிரியாது என்பதை உணர்த்தும் பாடல் இது. ஒரு நல்ல மணவாழ்க்கை மற்றும் அதன் சூழல் குறித்த இந்த தேடல் மிக அருமை.

இந்த நீயா நானாவில் அத்தகைய மண வாழ்கை எப்படி காதல் திருமணத்தில் மற்றும் நிச்சயிக்கபட்ட திருமணத்தில் அமைகிறது என்பதே இன்றைய நம் தலைப்பும் விவாதமும். எந்தத் திருமண முறை ஆனாலும் அதில் நிறை குறை இரண்டும் உண்டு. அது சூழலை பொருத்து மட்டும் அமைவதில்லை; உணரும் மனங்களைக் கொண்டும் அடங்கும்.

இருமனம் புரிந்து ஒரு மனமாய் உணர்ந்து இல்லறத்தில் எடுத்து வைக்கும் காதல் திருமணம் பெரிதும் வெற்றி அடைகிறது. ஆனால் சில இடங்களில் இந்த நிலை கசந்து விடுவதும் உண்டு. காதல் வாழ்கையில் இருந்த நிம்மதி திருமண வாழ்க்கையில் இல்லை என்று ஏமாந்த ஜோடிகளும் உண்டு.

நிச்சயித்த திருமணம் புதியதாய் இரு உறவுகளை எப்படி ஏற்கிறது? இரு மனமும் எப்படி அணுகுகிறது? இந்தத் திருமண முறையில் மகிழ்ச்சியான வாழ்கை அமைய எத்தகைய சூழலை நம் சமுகம் எடுக்கிறது என்பதைப் பற்றிய விவாதம் இனி வரும் நம் தோழமையின் கருத்துக்களைக் கொண்டு பார்ப்போம்.

### லஷ்மி
காதலில் ஏற்றுக்கொள்ளும் மனபக்குவம் அதிகம் இருக்கும். பெற்றோர்கள் செய்யும் திருமணத்தில் சகித்துக் கொள்ளும் மனபக்குவம் அதிகம் இருக்கும். மனதை உணர்ந்து வரும் காதல் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை மாறுவதில்லை.

ஆனால் பெற்றோர்கள் நிச்சயித்தத் திருமணத்தில் காதல் எனபது அதாவது, இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவே சில வருடங்கள் பிடிக்கும்... பின்னர் அவை முழு மனதுடன் ஒத்து வாழ வாழ்க்கையின் பாதி நாட்கள் ஓடிவிடும்.

மனதை மட்டும் காதலிப்பவர்கள் கண்டிப்பாகப் போராடி பெற்றோர்கள் ஆசிர்வாதத்துடன் திருமணம் செய்வார்கள்.

### ரம்யா ராஜ்
காதல் திருமணமோ... பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணமோ... எந்தத் திருமணமாக இருந்தாலும், அங்கே காதல் மிக முக்கியம். நம்மைப் பெற்றவர்கள் பார்த்த மாப்பிள்ளையாக இருந்தாலும்... நாம அவரைக் காதலிக்கிறோம். அதனால தான் மகிழ்ச்சியாக இருக்கிறோமே தவிர பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டது என்பதால் மட்டும் இல்லை. பெற்றவர்களும் தான் எல்லா பொருத்தமும் பார்த்து... பணம் இருக்கிறதா, பதவி இருக்கிறதா என்றுப் பார்த்துத் திருமணம் செய்கிறார்கள். அப்படியும் அவர்கள் பார்த்து வைத்தவர்களே இவர்கள் வீட்டுக்கு வந்து, இவர்களை முதியோர் இல்லத்திற்கு துரத்துகிறார்கள். அதற்கு அவர்கள் விரும்பினவர்களைத் திருமணம் செய்து வைத்தால், நம் அப்பா... அம்மா நம் ஆசையை நிறைவேற்றினார்கள்... நாமும் அவர்களை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு வரும்.

### விஸ்வநாதன்
பெற்றோர்கள், தாங்கள் ஆசையாக வளர்த்த மகளுக்கு நிறைய வரன்களைத் தேடி, மாப்பிள்ளையின் பழக்க வழக்கம் மற்றும் எதாவது கெட்ட பழக்கம் இருக்கிறதா என்று ஆராய்ந்து, தங்கள் மகளை கண் கலங்காமல் பார்த்துக் கொள்வானா? வாழப் போகும் இடத்தில் நம் மகள் நன்றாக இருப்பாளா என்பதை மனதில் கொண்டு மாப்பிள்ளை பார்ப்பார்கள்.

### ரமேஷன்
The ratio of lovelove cum arranged marriages are significantly increasing these days.

In arranged weddings, mostly this ego is balanced initially because of the drastic compromising of the female. This compromising is not coz of understanding the husband, but the fear of getting good names from the near and dear and the so called custom and system.

Marriage, being a mutual agreement why should only the female go to the extreme to compromise? Friends, you may disagree this, but ur inner mind know the truth. I am leaving it to you only.

**பவானி செந்தில்**
என்னைப் பொருத்தவரை பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம், நடைமுறையில், அன்றாட வாழ்கையில், குடும்பத்தை முன் எடுத்துச் செல்வதில் சந்தோஷம் தரக்கூடியது என்பேன். பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம் இரு நபர் மற்றும் குடும்பம் சம்பந்தப்பட்டதால் தோல்வி அடைவதும் குறைவு. பிரச்சனைகள் வருவதே (பெரும்பாலும்) குடும்பத்தினால் தான். அது இங்கு (கொஞ்சம்) தடைபடுகிறது. ஏனெனில் அவர்கள் விருப்படி தான் திருமணம் நடந்துள்ளது.

அதற்காக காதல் திருமணத்தை எதிர்க்கவும் இல்லை. தன் பெண்/பையன் விருப்பப்படும் வாழ்க்கை நல்லதாகத் தான் இருக்கும் என்று தெரிந்தால், சந்தோஷமாக அவர்களுடன் துணை நின்று திருமணம் நடத்த வேண்டும் என்பது என் கருத்து. இருவருடைய பெற்றோர்களும் (ஊர்/உலகத்தைப் பற்றி கவலைப்படாமல் (ஊர்/உலகத்துக்கும் இந்த நிலைமை வரும்!)) சந்தோஷமாகத் திருமணத்தை நடத்தினால் அந்தத் திருமணம் வெற்றி பெறும் (மேலே சொன்ன விட்டுக் கொடுத்தலுடன்) என்பது என் கருத்து.

**தேனுராஜ்**
காதல் திருமணமோ... நிச்சயிக்கப்பட்ட திருமணமோ... இரண்டிலுமே சில நல்லதும் இருக்கிறது... கெடுதலும் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை இரண்டிலுமே முழுமையான சந்தோஷம் என்பது அவரவரின் மனநிலையைப் பொருத்து மட்டும் அல்ல... சுற்றி இருக்கும் உறவுகள்... அக்கம்பக்கத்தார்... எல்லோருடைய பங்கும் இருக்கிறது. யாரையும் ஒதுக்கிவிட்டு நாம் வாழ்ந்துவிட முடியாது. அப்படிப்பட்ட சமூகத்தில் நாம் இல்லை. மேலைநாடுகளில் வேண்டுமானால் அது சாத்தியம்... ஆனால் இந்தியாவில்...? அதனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் மகிழ்ச்சி என்பது கணவன்-மனைவி இருவரை மட்டுமே சார்ந்தது இல்லை. அப்படி பார்த்தால் பெற்றோர்கள் பார்த்து செய்யும் திருமணத்தை விட காதல் திருமணத்தில் வலிகள் அதிகம். காலம் முழுவதும் வரும் வலிகளுக்கு நிவாரணம் தேடவே நமக்கு நேரம் சரியாக இருக்கும்போது எங்கேயிருந்து மகிழ்ச்சி கிடைக்கப்போகிறது?

**சல்மா**
காதல் யாருக்கு எப்போது வரும் என்று சொல்ல முடியாது, அப்படி இருக்கும்போது எல்லோரும் நல்லவர்களாகத் தான் தேர்ந்தெடுகிறார்கள் என்று என்ன நிச்சயம்? அப்படி தான் தேர்வு செய்தவர் நல்லவர் இல்லாத பட்சத்தில், தன் குடும்பத்தின் ஆதரவும் இல்லாமல், துணையும் சரியில்லாமல் அவர்கள் நிலை என்ன? எத்தனையோ காதல் திருமணங்களில் சிறிய பிரச்னை பெரிதாக ஆகி நல்ல விதமாக எடுத்துச் சொல்ல ஆளில்லாமல் தவறான முடிவு செய்துவிடுகிறார்கள்.

**சித்ரா மும்பை**
காதல் திருமணம் செய்பவர்கள் எல்லாம் சந்தோசமாக இல்லையா என்று நீங்கள் கேட்கலாம்? இருக்கிறார்கள்... நான் மறுக்கவில்லை. ஆனால் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்... விரல்விட்டு எண்ணக்கூடியவைகள் எல்லாம் விதிகளாக முடியாது. அவர்கள் விதிவிலக்குகள். அதைப்போல் பெற்றோர் செய்து வைக்கும் திருமணங்களில் கஷ்டப்படுபவர்களும் உண்டு. அவர்களும் விதிவிலக்கானவர்களே. விதியாக... நியமங்களாகப் பார்க்கப்படும் ஒன்றே வெற்றி பெற்றவை. அப்படிப் பார்க்கும் பொழுது, இல்லற வாழ்க்கை இனிதே அமைய, சந்தோசமாக வாழ, பெற்றோர் செய்து வைக்கும் திருமணங்களே சிறந்தது.

**டேனியா**
பெற்றவர்கள் அனைவரும் பிள்ளைகளின் மகிழ்ச்சியை மட்டுமே முதன்மையாகக் கருதுபவர்கள். அவர்கள் வாழ்வின் பயனாகப் பெற்றவர்கள் கருதுவதும் நமது மகிழ்ச்சியான வாழ்வையே. அப்படிப்பட்டவர்களிடம் இறுதிவரைப் போராடி, வெற்றி பெற்று அவர்களின் சம்மதத்துடன் திருமணம் நடக்குமாக இருந்தால், பெற்றவர்களின்

ஆசிர்வாதமே நம்மை என்றும் நலமாக வாழவைக்கும்.

**ப்ரியா கௌதம்**

காதல் கல்யாணம் என்பது நாமே நம் சொந்தப் பணத்தை மட்டும் வைத்துக் கட்ட முயற்சி செய்யும் வீடு. அதாவது அந்த இருவருக்கும் ஒருவர் மேல் ஒருவர் வைத்து உள்ள அன்பு, காதல், புரிதல், நம்பிக்கை இவை மட்டுமே மூலதனம். வங்கியில் கடன் கொடுக்கவில்லையா... பரவாயில்லை... சமாளிக்கலாம் என்ற நல்ல எண்ணத்தில் எழும்ப முயற்சிக்கும் சுயம்பு. இதில் திட்டமிட்டபடி அனைத்தும் நடந்தால் பரவாயில்லை. இல்லையென்றால் பாதியில் நின்ற கட்டிடம் தான்.

**ஷாஹிதா**

பக்குவப்பட்ட காதலைப் பெற்றவர்கள் புரிந்து கொள்ளலாம். பக்குவப்படாத காதலை என்ன செய்வது? அதனால் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் பாதுகாப்பானது. .இங்கும் வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும். ஆனால் பிரச்சனையே வாழ்க்கையாக இருக்காது. பிரச்சனைகள் வந்தாலும், உறவினர் மத்தியில் கௌரவம், மதிப்பு, விசேஷம், விழாக்களில் முன்னிறுத்தப்படுவது போன்ற சிறு சிறு சந்தோஷங்கள், அப்பிரச்சனைகளைக் கையாள நம் மனதிற்கு ஒருவித உற்சாகத்தைக் கொடுக்கும். நாம் தவறு செய்துவிட்டோம்... அதனால் தான் நமக்கு இப்படி ஒரு துன்பம் என்ற குற்ற உணர்ச்சி இருக்காது. மாறாக, நாம் எந்தத் தவறும் செய்யவில்லை. நம் பெற்றோரை நோகச் செய்யவில்லை.

**மேரி டெய்ஸி**

காதல் திருமண வாழ்க்கை என்பது மில்லியன் நட்சத்திரங்களுக்கு நடுவே தனித்து ஜொலிக்கும் நிலவைப் போல...! தனித்து இருந்தாலும் அதன் பெருமை, மதிப்பு, அழகுக் குறைவதில்லை!
தேய்பிறை வளர்பிறை பௌர்ணமி அமாவாசை என மாறலாம்.
ஆனால் ஏதும் நிரந்தரம் இல்லை!

**விஜி வேதாசலம்**

இந்த உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் திருமணத்தை எதிர் கொள்கின்றனர். ஆனால் வாழ்வதில் தான் இருக்கிறது, சொர்கமும் நரகமும். இன்று எத்தனையோ தம்பதிகள் பெற்றோரின் ஆசைக்காகவும், அவர்களின் கௌரவத்திற்காகவும் நிச்சயித்த திருமணம் செய்து கொள்கிறார்கள் தெரியுமா?
ஆனால் விரும்பியவனைக் கரம் பிடித்தால் ஆயிரம் துயரம் வந்தாலும் எதிர் கொள்ளலாம். நம் மனதிற்குப் பிடித்த வாழ்க்கை அமைந்தால் தான் திருமணம் இனிக்கும். இல்லையென்றால் திருமணம் வெறும் சடங்கு தான் என்பது என் கருத்து.

**பொன்ஸ்செல்லம்**

திருமண வெற்றிக்கு காதலும், புரிதலும் அவசியம் வேண்டும். அது எந்தத் திருமணமாக இருந்தாலும்கூட. காதல் திருமணத்தில், காதல் திருமணத்துக்கு முன்பு இருக்கிறது, திருமணத்திற்குப் பிறகும் காதல், புரிதல் இருப்பவர்கள் வாழ்வு மட்டுமே வெற்றியைச் சந்திக்கிறது.
பெற்றோர் நிச்சயம் செய்யும்போது, அங்கு காதல் இல்லாவிட்டாலும் புரிதல் கண்டிப்பாக ஏற்படுகிறது.

**ரோசி**

காதல் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே திருமணத்தில் சந்தோசம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. காதல் திருமணம் செய்து கொள்கிறவர்கள் திருமணத்திற்குப் பிறகு ஒத்துப்போகாமல் பிரிவை வேண்டுகிறவர்கள் அதிகம். இப்போது நடக்கும் காதல் திருமணம் பெற்றோர்கள் சம்ம்மதத்துடன் நடந்தாலும் அவர்களின் முழு சந்தோசத்துடன் நடக்கிறதா என்பது கேள்விக்குறி. பிள்ளைகள் படித்து வேளைக்குப் போய் கை நிறைய சம்பதிப்பதால் அவர்களால் பெருதாக அதற்குத் தடை சொல்ல முடிவதில்லை.

**கோதை சுரேஷ்**

இது சினிமா இல்லை வாழ்க்கை. சில சமயங்களில் போராடித் தான் வெல்ல வேண்டும். எல்லாம் சுலபமாகக் கிடைத்து விட்டால், அதன் மதிப்பு தெரியாது.
விட்டுக்கொடுத்தலும், பொறுமையும், சகிப்புத் தன்மையும், இருந்தாலே இருவிதத் திருமணங்களும் வெற்றிகரமாக அமையும்.
முதலில் வரும் காதலை விட, திருமணத்திற்குப் பின் வரும் காதல் தான் ஆழமானது.

**ஹேமலதா விஜய்**
காதல் முன்னாடி வருவதைவிட, திருமணத்திற்குப் பிறகு வருவது தான் சிறந்தது. காதலிக்கும் போது தெரியாத பிரச்சனைகள், திருமணத்தில் ஜெயிக்கா விட்டால், வெறுப்பு தான். அப்போது பெற்றோருக்காக மனசு ஏங்கும், இரு பாலருக்குமே.

**சுவாதி ஸ்ரீ**
உண்மையான காதலும், காதல் திருமணங்களும் என்றும் தோற்பதில்லை. நவ நாகரீகம் என்ற பெயரில் வரும் காதல்கள் காதல்களே அல்ல; அவை வெறும் கவர்ச்சிகள் தான் (இனக்கவர்ச்சி, பணத்திற்காக வரும் கவர்ச்சி & புகழுக்காக வரும் கவர்ச்சி).

பெற்றவர்கள் பார்த்து செய்யும் திருமணத்தில் எதாவது பிரச்சனை வந்தால் பெற்றவர்களும், உறவினர்களும், தலையிட்டு சரி செய்வார்கள் என்பதே இங்கு பேசிய அனைவரின் பெரும்பாலான கருத்தும். அது தவறு அல்ல. ஆனால் அப்படி அடுத்தவர் (பெற்றவர் மற்றும் உறவினர்) தலையிட்டு சரி செய்த வாழ்வில் உண்மையான அன்பு இருக்குமா அல்லது அது இல்லறத்திற்கு அழகாகுமா? கடவுள் ஒவ்வொருவருக்கும் சுய அறிவு கொடுத்திருக்கிறார் அல்லவா?

**ஸ்ரீகுமார்சவி**
நாம் பிறந்ததிலிருந்து இரவுபகல் பாராமல் சீராட்டி பாராட்டி வளர்த்த பெற்றோர்கள், நமக்கு அவர்களை விட்டுப் போகும் அடுத்த நிலையில், ஒரு புது வாழ்வுத் தொடங்கப் போகும்போது நல்ல துணை தேடி தரமாட்டார்களா? சில காலமே பார்த்துப்பழகிய ஒருத்தர் மேல் வைத்த நம்பிக்கையை ஏன் நம்மை ஆளாக்கின பெற்றோர் மேல வைக்கவில்லை?

அப்படி வைத்து, அவர்கள் நிச்சயித்த திருமணங்கள் பெரும்பாலும் மகிழ்ச்சியை மட்டுமே தந்துள்ளது. தந்துள்ளது. தந்துள்ளது.

**க்ளோரியா**
காதல் திருமணம் படிக்க நன்றாக இருக்கும். நிச்சயித்தத் திருமணம் வாழ நன்றாக இருக்கும். போற வழி எதுவாக இருந்தாலும் சேருமிடம் கோவிலாக இருக்க வேண்டும். எந்தத் திருமணமாக இருந்தாலும் அன்பு என்ற ஒன்று இருந்தால் ஜெயிக்கும்.

**ரவி அன்பில்**
காதலித்துக் கல்யாணம் செய்வது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அந்த இருவரும் தம் எதிர்காலத்தைப் பற்றி நன்றாக யோசித்து, பேசித் தீர்த்து, முடிவு செய்வது மிக அவசியம்.
உதாரணமாக அவர்கள் வெவ்வேறு மதத்தினரோ, வீட்டில் வேறு மொழி பேசுபவரோ, வேறு நாட்டில் வளர்ந்தவர்களோ என்று எத்தனையோ வித்தியாசங்கள் இருந்தால், கண்டிப்பாக இது மிகவும் முக்கியம். காரணம், அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தால் எந்த வேறுபாட்டைக் கடைபிடிப்பார்கள் என்பதை முதலாகவேப் பேசி முடிவு செய்யவேண்டும். இல்லையேல், அவர்கள் பிரச்சனை, குழந்தைகள் வரைச் சென்று எல்லோர் எதிர்காலத்தையும் பாதிக்கும்.

**செல்வி பாண்டியன்**
பெற்றோர் பார்த்து வைக்கும் திருமணமே சிறந்தது என்று தான் நானும் சொல்லப் போகிறேன். இன்றையக் காலத்தில் உண்மை காதல் எங்கே என்று தான் தேட வேண்டியிருக்கிறது. ஏதோ காதலிக்கவில்லை என்றால் பெரிய கொலைக் குற்றம் போல் பார்க்கிறார்கள். இதற்கு இன்றைய ஊடகங்களும் சினிமாவும்தான் காரணம். காதல் கதை தவிர வேறு படமே வருவதில்லை. இளைஞர்களைக் குறி வைத்தே படங்கள் எடுக்கப்படுவதும் ஒரு காரணம்.

**உஷா**
எனக்கு நிச்சயித்தத் திருமணம் பிடிக்கும். ஆனால், திணிக்கப்படும் நிச்சயித்தத் திருமணத்தை முழுமையாக எதிர்க்கிறேன். முக்கியமாக மனதால் வேறு ஒருவனையோ, ஒருத்தியையோ நேசித்து விட்டு, மற்றோருத்திக்கோ, மற்றொருவனுக்கோ மாலையிடும் மணவாழ்க்கை முழு மனத் திருப்தியை அளிக்காது என்பது என் கருத்து.

**அம்மு ராதிகா**
எல்லாக் குடும்பங்களிலும் சண்டை இருக்கிறது. ஆனால் இந்தக் காதல் திருமணத்தை பெற்றவர்களின் எதிர்ப்பில் செய்கிறவர்கள் போடுகின்ற சண்டை இருக்கிறதே... அப்பப்பா... அதை ஒரு காதலன்

காதலி பார்த்தார்கள் என்றால் அதோடு காதலாவது கத்திரிக்காயாவது என்று அப்பா அம்மாவைப் பார்த்து ஓடி விடுவார்கள். ரொம்ப மோசமா, இவர்கள் ஆராயாமல் செய்த தவற்றை ஒப்புக் கொள்ள முடியாமல் ஒருவர் மேல் ஒருவர் பழி போட்டு வாழ்க்கையையே நிம்மதி இல்லாமல் ஆக்கிவிடுவார்கள். இவர்களுக்கு பொறுமை என்பதே கிடையாது... அது இருந்தால் தான் பெற்றவர்களின் ஒப்புதலைப் பெற்று இருப்பார்களே. அது இல்லாததால் மிகவும் சிரமம்.

**கீதா.K**
காதல் கல்யாணம் தான் சிறந்தது. அதிலிருக்கும் வாழ்க்கை மட்டும் தான் நன்றாக இருக்கும் என்றோ, எல்லோரும் காதல் திருமணம் தான் செய்ய வேண்டும் என்றோ சொல்ல வரவில்லை. எல்லோருக்கும் அந்த சந்தர்ப்பம் நேராது. எனக்கு நடக்கும் என்று கூட நான் நினைத்தது கிடையாது. அதுவாகவே அமைந்தது. பெற்றோர் தேர்ந்தெடுக்கும் முன் ஒரு நல்ல துணையை சந்தித்தால் அவரை கல்யாணம் பண்ணுவதில் தவறு இல்லை என்று தான் சொல்கிறேன். பெற்றோர்களுக்கு இருக்கும் பணத்துக்காகவோ, செல்வாக்குக்காகவோ, வரப் போகிற சீருக்கோ, இல்லை பெண் பார்க்க நன்றாக இருக்கிறாள், இல்லை ஜாதகம் ரொம்ப நன்றாகப் பொருந்தி இருக்கிறது என்றோ கல்யாணம் நடக்கும் போது நம்மை நமக்காகவே, நம் குண நலன்களுக்காக விரும்பும் ஒருவரைக் கல்யாணம் பண்ணி சந்தோஷமாக இருப்பது தவறே இல்லை.

**வெண்ணிலா சந்திரா**
காதல் திருமணம் செய்துக் கொண்டவர்கள் ஏதோ ஓரிருவர் செய்கின்ற தவறு தான் எல்லோருடைய கண்ணுக்கு பூதாகரமாத் தெரியுது. 100ல் 10 பேர் செய்கின்ற தவறை எல்லோரும் ஊதி ஊதி பெரிது படுத்துவதால் எல்லோருக்கும் அது தெரிய வருகிறது. ஆனால் எத்தனையோ பேர் பெற்றவர்கள் சம்மதத்துடன் கல்யாணம் பண்ணி நன்றாக வாழ்வது இல்லையா?

**பிரத்யுக்ஷா**
காதல் திருமணத்தில், திருமணத்திற்கு முன்பே புரிதல் வந்து விடுகிறது. ஒன்றாய் ஒரே வீட்டில் இல்லாமல், எட்டி இருக்கும்போது இருக்கும் புரிதல், பக்கத்திலேயே இருக்கும்போது இன்னும் அதிகரிக்கவே செய்யும். கண்ணில் காணாத போதே உன் உணர்வுகளை என்னால் புரிந்துக் கொள்ள முடியும், என் ஆசைகளை உனக்குப் புரிய வைக்க முடியும் எனும்போது அருகில் முகம் பார்த்து நடக்கும்போது அவ்விடத்தில் இருக்கும் அன்பு இன்னும் பன் மடங்காகும்.

**ஸ்ரீஜா பாரதி**
நம்முடைய இதிகாசங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பார்வதி தவமாய் தவமிருந்து சிவனின் அன்பையும் காதலையும் பெற்றவர். அது தவறா? அங்குத் தொடங்கியது நம் கலாச்சாரம். காதல் என்பதை தவறான வார்த்தையாக மாற்றியது யார்? நம்மைத் தூக்கி நிறுத்தும் இந்த சமுதாயம் தான். காதலை எவ்வளவு கேவலமாக காட்ட முடியுமோ அவ்வளவு கேவலமாக சித்தரிக்கிறது. காதல் என்ற ஒற்றை வார்த்தை அன்பு, மரியாதை, புரிதல், ஒரு ஆறுதல் பார்வை, இப்படி பல வகையில் நமக்குள் புதைந்திருக்கிறது. எனவே காதலை இங்கு யாரும் குறை கூற முடியாது. நிச்சயித்த திருமணத்தில் வரும் காதல் மட்டும் காதல் இல்லையா? அப்படி இருக்கையில் ஏன் காதல் செய்து திருமணம் செய்ய கூடாது?

**கௌரி மோகன்**
பெற்றோர்கள் எப்போதும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு நன்றாக இருக்கவேண்டும் என்பதையே விரும்புவார்கள். அந்த நம்பிக்கையை பிள்ளைகளின் மனதில் பதியும்படி நடந்து, அதைப் பிள்ளைகளும் உணரும்பட்சத்தில் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணம் மகிழ்ச்சியாக இருக்கும். பெற்றோர், தங்கள் சுயலாபம் கருதி நடத்தும் திருமணங்கள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை.

அதேபோல காதல் திருமணத்தில் பணம், அந்தஸ்து, அழகு பார்த்து பிறக்கும் காதல் சில வெற்றி பெறுவதில்லை.

இந்த நீயா நானாவில் பங்குகொண்டு தத்தம் கருத்துக்களை பதிவு செய்த அனைத்துத் தோழமைகளின் கருத்துக்களும் அருமை. இதில் சிறப்பாக விவாதம் செய்து பரிசு வென்ற தோழிகள் **ரம்யா மற்றும் டேனியா** இருவருக்கும் பெண்மையின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

சிறுகதை

# காதல்:

...Ramyaraj




காலை ஒன்பது மணி. நகரில் இருந்து ஊருக்கு வெளியே இருக்கும் அந்த பஞ்சு மில்லின் நுழை வாயிலில், அந்த மில்லுக்குச் சொந்தமான பஸ் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய ஆண்களும், பெண்களும் மில்லின் உள்ளே சென்றனர். உள்ளே சென்றவர்களில் முக்கால் வாசி பேருக்கு பதினைந்திலிருந்து இருபது வயதிற்குள் தான் இருக்கும்.

அன்று தான் மலர்விழி வேலைக்குச் சேர்ந்த முதல் நாள். தயங்கி தயங்கி உள்ளே வந்தவளைப் பார்த்த சரவணன், அழகாக இருப்பதாக நினைத்தான். அவன் வந்த பஸ்ஸில் தான் அவளும் வந்தாள். அவளின் தயக்கத்தை உணர்ந்து அவளருகில் சென்றவன்,

"இன்னைக்கு தான் வேலைக்கு சேர்ந்திருக்கியா..." என்று கேட்க... அதிர்ந்து திரும்பிய மலர்விழி... சரவணின் முகம் பார்க்க... அவன் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

இவன்... இப்ப என்கிட்டயா பேசினான்... அப்புறம் ஏன்? வேற எங்கேயோ பார்கிறான்... என்று குழம்பியவள் மேலே நடக்க... அவளுடன் சேர்ந்து நடந்த சரவணன் "உன் பேர் என்ன ?" என்று மெதுவாகக் கேட்க... இப்போது மலர்விழி அதே இடத்தில் நின்றுவிட்டாள். சிறிது தூரம் சென்றதும் தான் அவள் வரவில்லை என்பதை உணர்ந்த சரவணன் திரும்பிப் பார்க்க... அவள் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

சுற்றி யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்று பார்த்தவன்... அவள் அருகில் வந்து அவள் முகத்தைப் பார்க்க... அவளும் அவனை தான் பார்த்தாள். ஒரு நொடி இருவரின் விழிகளும் ஒன்றோடு ஒன்று கலந்தது.

சரவணன் அவளிடம் "நடந்துகிட்டே பேசு..." என்றதும், அவள் நடக்கத் தொடங்க... அவனும் அவளுடன் நடந்தவன் "இங்கே ஆம்பிளைங்களுடன்... பொம்பளைங்க பேசக் கூடாது..." என்றான். பேசும் போது அவன் உதடு அசைவது தெரியவே இல்லை... அவ்வளவு கவனமாகப் பேசினான்.

“ஏன்...?"

“இங்க அப்படித்தான்... வேலை நேரத்தில பேசினோம்ன்னு சொல்லி ஒரு நாள் சம்பளத்தை கழிச்சிடுவாங்க... உனக்கே போகப் போக புரியும். இப்ப உன் பேர் என்ன சொல்லு?"

"மலர்விழி..."

"உன்னைப் போல உன் பேரும் அழகா இருக்கு... அதோ... நீ அந்த இடத்துக்குப் போகணும்... அவங்களே வந்து நீ என்ன வேலை செய்யணும்னு சொல்வாங்க..." என்று சொல்லிவிட்டு அவன் வேலை பார்க்கும் இடத்திற்குச் சென்றான் சரவணன். உள்ளே சென்று தனது வேலையைத் தொடங்கிய சரவணன்... மனதில் மலர்விழியை நினைத்துக் கொண்டிருந்தான். அழகா ஓவியம் போல இருக்கா... மூன்று வருஷம் முடியும் போது... என்று நினைத்தவனின் மனது வலித்தது.

தங்களின் திருமணத்திற்காகவோ இல்லை... தங்களின் கூடப் பிறந்தவர்களின் திருமணத்திற்காகவோ... இங்கே மூன்று வருட ஒப்பந்தத்தில் வேலைக்கு வருபவர்கள் எண்ணிக்கை அதிகம். ஒப்பந்த காலம் முடிந்ததும் அவர்களுக்கு கிடைக்கும் பணம் வெறும் முப்பது ஆயிரம் தான்... ஆனால் அதற்காக அவர்கள் உழைக்கும் உழைப்பு...?

காலையில் ஒன்பது மணிக்கு துவங்கும் வேலை... மாலை ஐந்து மணிக்குத் தான் முடியும். அந்த எட்டு மணி நேரமும்... அவர்கள் நின்று கொண்டு தான் இருக்க வேண்டும். அதோடு வேலை பார்க்கும் இடத்தில் போதிய காற்று வசதி இருக்காது. அது வேறு ரொம்ப அவஸ்தையாக இருக்கும். அதோடு காற்றில் இங்கும் அங்கும் பறக்கும் பஞ்சின் தூசி மூக்கு மற்றும் வாய்க்குள் வேறு சென்றுவிடும். அது ரொம்ப ஆபத்தானது. ஆனால், அதைப் பற்றி நிர்வாகத்திற்கு எந்த அக்கறையும் இல்லை. அவர்களுக்கு வேலை நடக்க வேண்டும் அவ்வளவு தான். அப்படி உடல் நலமில்லாமல் பாதியிலேயே வேலையை விட்டால்... அவர்கள் இத்தனை நாள் வேலை செய்ததற்கான பணத்தையும் கொடுக்க மாட்டார்கள். அதுவும் அவர்களுக்கு லாபம் தான். அதனால் அவர்கள் அங்கு வேலை செய்யும் ஊழியர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை.

வாரத்தில் ஆறு நாட்கள் நின்று கொண்டே வேலை செய்யும் பெண்களுக்கு.... உடம்பில் உள்ள சத்துக்கள் எல்லாம் வடிந்து, முடி உதிர்வது, மாதாந்திர நாட்களில் அதிக உதிர போக்கு ஏற்படுவது, உடல் பலகீனம் மற்றும் பஞ்சின் தூசி மூக்கில் செல்வதால் ஆஸ்துமா,

சிறுகதை

# காதல்

இன்னும் நிறைய பிரச்சனைகள் வரும். அவர்கள் மூன்று வருட ஒப்பந்தம் முடிந்து வெளியே செல்லும் போது, அழகெல்லாம் போய் எலும்பும் தோலுமாகத் தான் வெளியே செல்வார்கள். அதனால தான் தன் அக்காவும், தங்கையும் இங்கே வேலைக்கு வருகிறோம் என்று சொன்னதற்கு அவன் ஒத்துக் கொள்ளவில்லை. மலரும் அப்படி ஆகிடுவாளோ... என்று நினைத்த சரவணன் மனம் வருந்தினான்.

அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்த மலரும், சரவணனைத் தான் நினைத்துக் கொண்டிருந்தாள். அவன் சொன்ன உன் பேரும் உன்னை மாதிரி அழகா இருக்கு... என்றது நினைவுக்கு வந்து அவள் முகத்தை சிவக்க வைத்தது. அவள் யாரோ காலி பையன் சும்மா வம்பு இழுக்கிறான் என்று தான் முதலில் சரவணனைப் பற்றி நினைத்தாள். ஆனால் அவன் அப்படிப்பட்டவன் இல்லை என்று அவளுக்கு அவனின் முகத்தைப் பார்த்ததும் தெரிந்தது. அவன் கண்களில் நேர்மை இருந்தது.

அன்று ஒரு நாளே மலர் மிகவும் சோர்ந்து விட்டாள். இன்னும் மூன்று வருஷம் இங்கு வேலை பார்க்கவேண்டும் என்று நினைக்கும் போதே அவளுக்கு மலைப்பாக இருந்தது. மாலையில் பஸ்சில் ஏறி அமர்ந்ததும் அவள் எதிரில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்த சரவணன் அவளைப் பார்த்து புன்னகைக்க... பதிலுக்கு மலரும் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"உங்க பேர் என்ன? நீங்க எந்த ஊர்?"

"என் பேர் சரவணன்... உங்க ஊருக்கு அடுத்த ஊர் தான் மேலூர்". மலர் "நீங்க எத்தனை வருஷமா இங்க வேலை பார்க்கறீங்க..."

"நான் அஞ்சு வருஷமா... இங்க தான் வேலை செய்றேன். ஆமா... உனக்கு வேற வேலை கிடைக்கலையா...? இங்கப் போய் எதுக்கு வேலைக்கு வந்த..." என்றான், அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

மலர் "என்னைச் சொல்றீங்க... நீங்க மட்டும் எதுக்கு இங்க வேலைக்கு வந்தீங்களாம்...?" அவள் மெதுவாக பேசுவதாக நினைத்து... குனிந்து அவன் முகத்தில் அருகில் முகம் வைத்து... குழைவான குரலில் கேட்க, அதைப் பார்த்து சரவணனின் முகத்தில் புன்னகை தோன்ற "நான் பன்னிரண்டாம் வகுப்பு வரைப் படிச்சேன்... அப்புறம் படிக்க வசதி இல்லை... மாச சம்பளத்துக்கு வேலைக்கு போனேன்... ஆனா அது பத்தல... எங்க வீடு அடமானத்தில இருக்கு...அப்புறம் எனக்கு ஒரு அக்கா... ஒரு தங்கச்சி இருக்காங்க. அவங்களுக்கு கல்யாணம் பண்ணனும். எங்க அப்பா சம்பாதிக்கிறது சாப்பாட்டுக்குத் தான் சரியா வருது... அதுக்குத் தான்" என்றான்.

மலர் "எங்க வீட்லயும்... அது தான் நிலைமை. எங்க அப்பா சம்பாதிக்கிறது சாப்பாட்டுக்குத் தான் வருது... எங்க அண்ணன் வேலைக்குப் போகாம சும்மா சுத்திட்டு இருக்கு... எனக்கு கல்யாணம் ஆகணும்னா... நான் தான் வேலைக்கு போகணும் அதனால தான்..."

சரவணன் "உங்க அண்ணன நாலு அறை அறைஞ்சு வேலைக்கு அனுப்பாம... நீ எதுக்கு வந்த? நான் என்னோட அக்காவையும், தங்கச்சியையும் இங்க வேலைக்கு வர கூடாதுன்னு சொல்லிட்டேன்". "உங்க அக்கா தங்கச்சிக்குக் கிடைச்ச மாதிரி கூட பிறந்தவன் எனக்கு கிடைக்கலையே! நான் என்ன பண்றது?" என்றவள், அப்போது தான் நினைத்தாள்... நான் என்ன இப்படி முன்ன பின்ன தெரியாதவன்கிட்ட எங்க வீட்டு விஷயத்தை எல்லாம் சொல்கிறேன் என்று... அதோடு சரவணனிடம் பேசாமல் ஜன்னல்புறம் திரும்பி வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவளின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட சரவணனும்... அதற்கு மேல் அவளிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. அவளோடு அதிகம் பேசினால் மற்றவர்களின் கவனத்திற்கு ஆளாவோம் என்று பேசாமல் இருந்தான். அவள் ஊர் வந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்கிய மலர்... திரும்பி சரவணனைப் பார்க்க, அவன் லேசாக தலை அசைத்து விடை கொடுத்தான். மலர் சிரித்து கொண்டே தன் வீட்டை நோக்கி ஓடினாள். அன்று இரவு மலரால் கால் வலியில் தூங்கவே முடியவில்லை... திரும்பித் திரும்பி படுத்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பஸ்ஸில் ஏறியதும் சரவணனை தான் அவள் கண்கள் தேடியது. அவன் கடைசி சீட்டில் அமர்ந்திருந்தான். மலரைப் பார்த்து அவனுக்கு முன்பிருந்த சீட்டில் அமரும்படி ஜாடை காட்ட... அவளும் சென்று அமர்ந்தாள்.

அவளின் முகத்தையே சிறிது நேரம்

சிறுகதை

# காதல்:



பார்த்தவன் "நேத்து நைட் தூங்கலையா? ரொம்ப கால் வலியா?" என்றான் சரியாக.

அவள் அவனை ஆச்சரியமாகப் பார்க்க...

“என்ன பார்க்கற...? எனக்கு எப்படி தெரியும்னா...? நானும் அதை எல்லாம் அனுபவிச்சிருக்கேனே. அப்புறம் தெரியாதா... நீ நைட் படுக்கும் போது சுடு தண்ணியில... காலை கொஞ்ச நேரம் வச்சிரு... அப்புறம் நல்லா தைலம் போட்டு உருவி விடு... அடிக்கடி காலை நீட்டி மடக்கு... உட்கார்ந்து எந்திரி... அப்ப தான் ரத்த ஓட்டம் காலுக்கு அதிகமா கிடைக்கும்" என்று வரிசையாக அவளுக்கு அறிவுரை சொல்ல...

அதை மலர் புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளின் முகத்தைப் பார்த்தவன் "நான் சொல்றது எல்லாம் செய்வ தான...?" எங்கே அவள் அலட்சியமாக இருந்து விடுவாளோ என்று கவலையுடன் கேட்க...

அவனின் அக்கறை அவளது விழிகளைக் கலங்கச் செய்ய "கண்டிப்பா செய்வேன்..." என்றாள் மெதுவாக.

அவள் சொன்னதைக் கேட்டு முகம் மலர்ந்தவன் "அப்புறம்... இன்னொரு முக்கியமான விஷயம்... நல்லா சாப்பிடு... அப்ப தான் தெம்பா வேலை செய்ய முடியும்" என்றான்.

“நேத்து தான் என்னைப் பார்த்தான்... அதுக்குள்ள இவனுக்கு ஏன் என் மேல இம்புட்டு அக்கறை” என்று நினைத்தவள்... சரி என்று தலையாட்ட, அவளிடம் ஒரு துணியை கொடுத்த சரவணன் "இதை மூக்குல கட்டிட்டு வேலை பாரு... அப்ப தான் தூசி மூக்குலையும், வாயிலையும் போகாது. சரியா? மத்தவங்க கிண்டல் பண்றாங்கன்னு கட்டாம இருக்காத... நான், நீ கட்டி இருக்கியான்னு வந்து பார்ப்பேன்" என்று மிரட்ட...

அவன் தன் நல்லதிற்குத் தான் அப்படி பேசுகிறான் என்று உணர்ந்த மலரும் சரி என்றாள்.

மலருடன் வேலைக்குச் சேர்ந்த கலாவுடன், அவளுக்கு நட்பு ஏற்பட்டது. அவள் சரவணின் ஊர் தான். அவளுக்கு ஏற்கனவே அவனைத் தெரியும் அதனால் பஸ்ஸில் மூவரும் பேசிக்கொண்டே செல்வார்கள். காலையில் ஒரு மணி நேரமும், மாலையில் ஒரு மணி நேரமும் செய்யும் பஸ் பிரயாணம் அவர்களுக்குள் நல்ல உறவை ஏற்படுத்தியது. சரவணனுக்கு ஏற்கனவே சுந்தர் என்ற நண்பன் உண்டு. அவன் தனது வண்டியில் வேலைக்கு வருவான். அவனையும் சரவணன் மலருக்கு அறிமுகப்படுத்தினான்.

நாட்கள் இப்படியே செல்ல, சரவணனும், மலரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டனர். வாய் வார்த்தையாக இருவரும் காதலிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளவில்லை என்றாலும், மனதிற்குள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதை அறிந்தே இருந்தனர். கலாவிற்கும் இது தெரியும் என்பதால் அவள் பஸ்ஸில் இவர்களைக் கண்டு கொள்ளாமல் மற்றவர்களுடன் பேசுவாள்.

ஒரு நாள் மெதுவான குரலில் மலருடன் பேசிக் கொண்டிருந்த சரவணன் "துபாய்ல கார் ஓட்றவங்களுக்கு நல்ல சம்பளமாம்... நானும் டிரைவிங் கத்துக்கிட்டேன். ஆனா... என்ன பிரோஜனம்? அங்க போகப் பணம் இல்லை. நான் மட்டும் அங்க வேலைக்குப் போயிட்டேனா... மூன்று வருஷத்தில என் குடும்பம் முன்னேறிடும். என்னோட அக்காவுக்கும் தங்கச்சிக்கும் கல்யாணம் பண்ணிடுவேன். உன்னையும் மில்லுக்கு வேலைக்கு அனுப்ப மாட்டேன்" என்று சொல்ல.

மலர் அவனைப் பார்த்து "உங்க அக்கா தங்கச்சிக்கு கல்யாணம் பண்றேன்னு சொல்றது சரி... அது என்ன என்னை மில்லுக்கு அனுப்ப மாட்டேன்னு சொல்றீங்க? அதைச் சொல்ல நீங்க யாரு...?" என்று கேலியாகக் கேட்க,

"ம்ம்... உன்னைக் கட்டிக்க போறவன்..." என்றான் மிடுக்காக. “நீங்க என்னைக் கட்டிக்க போறீங்களா...? இது எப்ப இருந்து...?" என்று மலர் அழகாக தன் சிவந்த உதட்டைக் குவிக்க... அதில் மயங்கிய சரவணன் “ஏய்... வேணாம் தெரியாத மாதிரி நடிக்காத... உனக்கும் என்னை பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும்"

"அப்படியா... சரி அப்படியே வச்சுக்கோங்க..." என்று மலர் மறைமுகமாக தன் சம்மதத்தைத் தர...

சரவணன் சந்தோஷமாகச் சிரித்தான்.

சிறுகதை

# காதல்




சரவணனும், மலரும் ஒருவர் மேல் ஒருவர் மிகுந்த அன்பு வைத்திருந்தனர். இருவரின் குடும்பமும் பொருளாதாரத்தில் ஒரே நிலை என்பதால்... தங்கள் திருமணத்திற்கு பாதிப்பு இல்லை என்று நிம்மதியாக இருந்தனர்.

இப்படியே மலர் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் முடிந்த நிலையில், திடீரென்று ஒரு வாரம் மலர் வேலைக்கே வரவில்லை. அதைப் பார்த்து அவளுக்கு உடம்புக்கு முடியவில்லையோ என்று தவித்த சரவணன், அவர்கள் ஊருக்குத் தன் நண்பன் சுந்தருடன் சென்றான்.

மலர் வீட்டின் முன்பு பந்தல் போட்டிருக்க, அங்கிருந்த கடையில் எதற்கு பந்தல் என்று கேட்க, "அந்த வீட்ல மலர் பொண்ணுக்கு இன்னைக்கு அவங்க அண்ணன் சிநேகிதனோட நிச்சயம். அடுத்த மாசம் கல்யாணம்" என்று கடைகாரர் சொல்ல... சரவணன் அதிர்ச்சி அடைந்தான்.

அதிர்ச்சியில் அதே இடத்தில் சிலையாக நின்ற சரவணனை அவனது நண்பன் “வா... டா...” என்று அழைத்துக் கொண்டு தங்கள் ஊருக்குச் சென்றவன், வழியெல்லாம் மலரைத் திட்டிக்கொண்டே வந்தான். "பார்த்தியா... காசு இருக்கிறவன் வந்ததும், அவன் பின்னாடி போய்ட்டா... இதுக்கு தான் இவளுங்களை நம்பக்கூடாது... நம்ப வச்சு கழுத்தறுத்துட்டாளே..." என்று அவன் நண்பன் தன் குமுறலைக் கொட்ட...

"அவளைத் திட்டாதடா... அவ எனக்காகத் தான் அப்படி செஞ்சா. என்னோட மாமா நான் அவர் பொண்ணைக் கட்டிக்க ஒத்துக்கிட்டா... என்னை வெளிநாட்டுக்கு அவரே செலவு செஞ்சு வேலைக்கு அனுப்புறேன்னு சொன்னார். நான் மலர விரும்புறதுனால வேண்டாம்ன்னு சொல்லிட்டேன். அது எப்படியோ மலருக்கு தெரிஞ்சிருக்கு. அதனால தான் இத்தனை நாள் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டு இருந்த அவங்க அண்ணனோட சிநேகிதன கல்யாணம் பண்ண ஒத்துகிட்டா. பாவம்டா அவ... எனக்காக அவளுக்கு பிடிக்காதவனை கல்யாணம் பண்ணிக்க போறா..." என்று வேதனையுடன் சரவணன் சொல்ல... கேட்ட சுந்தருக்குமே அழுகை வந்தது.

அடுத்த நாள் மில்லில் இனி வேலைக்கு வர மாட்டேன் என்று சொல்ல வந்த மலர், காலையில் எப்போதும் செல்லும் பஸ்ஸிலேயே ஏறியவள்... எப்போதும் உட்காரும் இடத்திலேயே சென்று அமர்ந்தாள்.

மெதுவாக மலர் திரும்பி சரவணின் முகம் பார்க்க, அவன் கண்கள் கலங்கி, சிவந்து.... ஆள் பார்ப்பதற்கு அரை உயிராகத் தான் இருந்தான்.

"எனக்குக் கல்யாணம்... இனிமே வேலைக்கு வர மாட்டேன். நீங்களும் வெளி நாட்டுக்கு போற வேலையப் பாருங்க" என்றவளின் கண்களும் கண்ணீர் வடித்தது. "அதுக்கு தான இப்படி பண்ணின? அப்புறம் போகாம இருந்து மட்டும் என்ன செய்யப் போறேன்..." என்றான் விரக்தியாக.

"போறேன்னு சொல்லாதீங்க... போயிட்டு வரேன்னு சொல்லுங்க. உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் தேடி வரும் போது, அதை என்னை நினைச்சுத் தான் நீங்க வேண்டாம்னு சொன்னீங்கன்னு எனக்குத் தெரியும். கலா சொன்னா... அப்புறம் தான் நான் இந்த முடிவு எடுத்தேன்" என்றாள் மலர்.

“அதுக்காக... நீ இப்படி அவசரமா கல்யாணம் பண்ணிக்கனுமா? அவன் பொறுப்பில்லாம ஊரச் சுத்திட்டு திரியறான்" என்று சரவணன் ஆவேசமாகச் சொல்ல.... "கல்யாணத்துக்கு முன்னாடி எல்லா ஆம்பிளைங்களும் அப்படித் தான் இருப்பாங்க. நான் அவங்களை மாத்திடுவேன். அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம்" என்று சரவணின் வாயை மலர் அடைக்க... "அப்புறம்... உன் இஷ்டம். எனக்கு ஒரே ஒரு நிம்மதி... நீ மில்லுக்கு இனிமே வேலைக்கு வரமாட்ட..." என்று சரவணன் சொல்ல.

"எல்லோருக்கும் நினைச்ச வாழ்க்கைக் கிடைக்காது. கிடைச்ச வாழ்க்கைய நினைச்சுக்க வேண்டியது தான். ஆனா நீங்க ஆசைபட்ட மாதிரி... உங்க குடும்பத்தை காப்பாத்த ஒரு வழி கிடைச்சிருக்கு, அதை நினைச்சு சந்தோஷப்படுங்க. என்னை நீங்க சந்திக்கவே இல்லைன்னு நினைச்சிக்கோங்க" என்ற மலர் எழுந்து வேறு சீட்டில் சென்று அமர்ந்தாள்.

சரவணனும், மலரும் தங்களின் குடும்பத்திற்காக, தங்கள் காதலை தியாகம் செய்தனர். இந்த சரவணைப் போல்... மலரை போல்... நம் நாட்டில் எத்தனையோ காதலர்கள் தங்கள் குடும்பத்திற்காக தங்கள் காதலை விட்டுக் கொடுத்திருகின்றனர்.

சேர்ந்தா தான் காதல் வெற்றி பெற்றது என்று அர்த்தமா...? நாம் விரும்பியவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைத்து விலகிப் போவதும் வெற்றி பெற்ற காதலுக்குச் சமம் தான். ஏன்... சொல்லப்போனால் அது தான் உயர்ந்த மற்றும் உண்மையான காதல்.

My அங்காடி MY ANGADI .com

Traditional Tanjore Paintings Collection



Call us @ 83441-43220

Free shipping across India.

International Shipping also Available.

Traditional Paintings @ www.MyAngadi.com

Buy Now

தொடர்கதை...





# 3 மந்திரப்புன்னகையோ!! மஞ்சள் நிலவோ!!!

- சரண்யா ராஜு

கி.பி 2020

ஆராதனா தனது தாயை சமாதானம் செய்ய முடியுமா இல்லை தனது தலைமையிடம் மறுத்து சொல்லுவதா என பட்டிமன்றம் செய்து கொண்டிருந்த நேரத்தில், அவளின் தாய் அன்புக்கரசி அவளறையில் தனது கணவர் மதியரசன் இறுதியாய் அவளிடம் கொடுத்துச் சென்ற பெட்டியை திறக்கவா வேண்டாமா என தன் மனதில் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தார்.

அவரின் நினைவுகள் பலகாலம் கழித்து கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைத்து பார்த்துக் கொண்டிருந்தது. மதியரசன் அன்புக்கரசியின் சொந்த அத்தை மகன் தான். சிறுவயதிலிருந்தே இவளுக்கு அவர் தான் எனச் சொல்லி வளர்த்ததனர் பெற்றோர். மதியரசனும் எப்போதும் அன்பு மேல் அன்பை பொழிந்ததால் எந்த கவலைகள் இன்றியும் சந்தோசமாய் வளர்ந்தாள். மதி நன்றாக படித்ததால், அன்புவையும் அவர்கள் பெற்றோர் அவரைப் போலவே படிக்க வைக்க காதலுடன் படிப்பும் வளர்ந்தது. திருமணம் அதன் பிறகு வாழ்க்கையென அனைத்தும் தெளிந்த நீரோடையெனச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் சிறகாய் ஆராதனா பிறந்தாள். அவள் பிறந்த போது அவர்களின் குடும்பமே சந்தோஷச் சாரலில் நனைந்தது. அதுவும் மதியின் தந்தை வழி தாத்தா இவ்வுலகமே தன் கையில் கிடைத்தது போல் சந்தோசப்பட்டார். ஆம் ஆறேழு தலைமுறைகள் கழித்து பிறந்த முதல் பெண் குழந்தை... அதனால் மகாலக்ஷ்மியே பிறந்ததாய் சந்தோசப்பட்டார்.

அதோடு குழந்தையை எப்போதும் தன்னிடமே வைத்துக் கொள்ள நினைத்தார். அதில் தான் பிரச்சனை ஆரம்பித்தது. அன்புவிற்கு தன் குழந்தையை தாயாய் கொஞ்ச கூட அதிக நேரம் கொடுக்கவில்லை. 'என் ராணி, எங்கள் குலதெய்வமென' அவரின் தாத்தாவே வைத்துக் கொள்ள விரும்பினார். எங்கு சென்றாலும் அவளையும் தன்னுடனே அழைத்துச் செல்ல விரும்ப, அதுவே அன்புவின் வெறுப்பை சம்பாதிக்க காரணமாய் அமைந்தது. அதன் பிறகு அவருக்கு தனியே சென்று தன் குழந்தை தன் குடும்பமென வாழ வேண்டுமென்று ஆசை வர, அதுவே மதிக்கும் அன்புக்கும் இடையே பிரச்சனை வர கருவாய் அமைந்தது. இப்படி சிறு சிறு பிரச்சனைகள் பூதாகரமாக வெடிக்க ஆரம்பித்தது. அன்புவுக்கு இத்தனை நாள் இல்லாமல் இப்போது சிறு சிறு சந்தேகங்கள் மதி மேல் முளைக்க ஆரம்பித்தன. ஆம்... சந்தோசம் கொண்ட வரை வீட்டிற்கு நேரத்தில் வந்து கொண்டிருந்தவர், வீட்டில் எப்போதும் தொல்லையென்றவுடன் தன்னை வேலையில் தொலைத்துக் கொண்டார். அதுவும் ஒரு வகையில் அன்புவை ஆத்திரம் கொள்ள வைக்க, அவளின் மனம் ஆயிரம் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தது.

ஆராதனாவும் மழலை கொஞ்சலுடன் எப்போதும் தாத்தாவோடு ஒன்றியே காணப்பட்டாள். பசிக்கும் நேரம் மட்டுமே மற்ற யாராவது தேவைப்பட்டனர். எப்போது பெரிதாய் பிரச்சனைகள் வெடிக்கும்மென காத்துக் கொண்டிருந்த நேரத்தில் தான் அவர்களின் தாத்தா ஆராதனாவைக் கூட்டிக் கொண்டு எப்போதும்

போல வனக்காட்டிற்கு செல்கிறேன் என ஆரம்பித்தார். அப்போது ஆராதனாவுக்கு இரண்டு வயதுக்கு கொஞ்சம் மேலே.

தாத்தா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அன்பு தாங்கள் தனியாய் செல்வதாய் அறிவிக்க அனைவருக்கும் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மதி மறுத்து பேச, உடனே அன்பு தான் மணமுறிவு செய்து விட்டு குழந்தையைத் தனியாய் அழைத்துச் செல்வதாய் சொல்ல, அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். மதி பேச முடியாமல் வாயடைத்து நிற்க, அன்புவோ உறுதியாய் பேச ஆரம்பித்தார். தாத்தா சொல்வதை அவள் காது கொடுத்து கேட்கவில்லை. கேட்டிருந்தால் அதன் பின் நிகழ்ந்தவற்றை தடுத்திருக்கலாம்.

அன்றைய நாளின் நிகழ்வுகள் தொடர்ந்தது போல் அந்த வாரம் முழுவதும் அமைதியாய் கழிந்தது. மதி அன்புவை எவ்வளவு சாமதானம் செய்ய முயன்றும் முடியவில்லை. மதியின் மனம் இயல்பு நிலையில் இல்லாததால் அவருக்கு சாலையின் மீது கவனமில்லாமல் விபத்தில் முடிந்தது. அன்புவால் அதை ஏற்க முடியவில்லை. ஆம்.. என்ன தான் கோபம், சந்தேகம் என பல பூட்டுக்களை தன்னை சுற்றி அவள் போட்டுக் கொண்டாலும், அவளின் மனம் சிறுவயதிலிருந்தே அவரின் மீது மட்டும் தான் நாட்டம் கொண்டிருந்தது. அதனால் அவரால் மதிக்கு விபத்து என்றதும் தாங்கவில்லை. தானும் இறந்துவிடலாம், அனைத்தும் முடிந்துவிடும் என நினைத்த போது தான் எதற்காய் இத்தனை நாள் சண்டை போட்டோம், தனது குழந்தை பற்றிய நினைவு அவளின் உள்ள நினைப்பை தடை செய்தது.

மருத்துவமனையில் ஆபத்துக் கட்டத்தில் இருந்த போது மதி அன்புவிடம் இறுதியாய் பேசியது இன்னும் முழுமையாய் அன்புக்கு புரியவில்லை. இருந்தும் புரிந்தது என்னவென்றால்,

“அன்பு... உனக்கு என் மேல் கோபமிருக்காலம், ஆனால் நான் செய்ததற்கு காரணமிருக்கிறது. தாத்தாவும் நம்மிடமிருந்து ஆராதனாவை பிரித்ததற்கு காரணம் உண்டு... ஆனால் அதை சொல்லி பயமுறுத்த வேண்டாமென இருந்தோம். இப்போது அதுவே நடந்துவிட்டது... நடந்தவையனைத்தும் போகட்டும்... இனி ஆராதனாவை சந்தோசமாய் பார்த்துக் கொள்... நம் அறை அலமாரியில் ஒரு பெட்டி இருக்கும். அதை எப்போது உனக்கு தாங்க முடியாத வேதனை வருகிறதோ, இல்லை ஆராதனாவைப் பற்றிய முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுகிறாயோ அப்போது திறந்து பார். விதியை எப்போதும் வெல்ல முடியாது. அவளுக்கென்று எழுதப்பட்டது கண்டிப்பாய் நடக்கும்...” என்று சொல்லிவிட்டு இறந்துவிட்டார்.

அதன் பின் அன்புவால் அங்கே இருக்க முடியவில்லை. ஒரு வகையில் மதியின் இறப்பிற்கு தானும் ஒரு காரணம் என நினைத்தவளால் அந்த ஊரில் இருக்க முடியவில்லை. பார்க்கும் ஒவ்வொரு இடமும் மதியை நினைவுபடுத்த எப்படியோ அப்போது தரப்பட்ட கணினிப் பயிற்சியை செவ்வனே முடித்து உடனே வெளிநாட்டில் வேலைக்கு விண்ணப்பம் செய்து வந்துவிட்டாள். இதெல்லாம் நடந்தேற அடுத்த ஒரு வருடமாகியது. வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்கிறேன் என்ற போது அனைவரும் மறுக்க தாத்தா மட்டும் தான் செல் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அவரைப் புரியாத பார்வை பார்த்துவிட்டு வந்தவள் அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாய் இந்தியாவுடனான தொடர்ப்பை விட்டுவிட்டாள். ஏனெனில் அவர்களுடன் பேசினால் மதியின் நினைவு அவளை கொல்லாமல் கொலை செய்ய அதை தாங்க முடியவில்லை. அதனால் அவளை நிலைநிறுத்திக் கொள்ள இந்தியாவைப் பற்றி மறக்க நினைத்து இன்னும் மறக்க முடியாமல் தவித்துக் கொண்டுதான் வாழ்கிறாள். ஆராதனாவும் முதலில் அழுது அடம்பிடித்தவள், பின் இதுவே பழக்கமாக வளர வளர மழலையில் நடந்த எதுவும் நினைவில்லாமல் போனது.

அதன் பின் வாழ்க்கை அதன் பாட்டில் சென்று கொண்டிருக்க, பல காலம் கழித்து ஆராதனாவின் பிடிவாதம் பழையதையெல்லாம் நினைத்துப் பார்க்க வைத்தது.

## தொடர்கதை...

அவள் நினைவோடு அப்பெட்டியை பிரித்தவருக்கு அதில் பல மந்திரித்த தகடுகளும் அதோடு வைத்திருந்த ஓலைச்சுவடியும் பின் துணியில் கட்டிவைக்கப்பட்டிருந்த மஞ்சள் பூசப்பட்டிருந்த புத்தகமும் கிடைத்தது.

ஒவ்வொரு தலைமுறை எழுத்துக்களும் பதிகப்பட்டிருக்க, அடுத்த தலைமுறைக்கு செய்திகள் தெரிவிப்பதற்காய், எழுத்துக்கள் தற்காலத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டிருந்தது. கடைசியாய் எழுதிய எழுத்துக்கள் மதியின் தாத்தாவுடையது. தாத்தா நேரடியாய் மதிக்கு தந்திருக்கலாம். ஏனெனில் அதில் மதியின் தந்தை எதுவும் எழுதவில்லை. குறிப்புக்கள் அனைத்தும் ஏதோ ஒரு தீவைப் பற்றி சொல்ல அங்கே வாழ்ந்த அவர்களின் வழிப்பெண்ணை தெய்வமாய் உருவகித்து கூறப்பட்டிருந்தது. அவளின் பெயர் இறுதியாய் ஆராதனா என நிறுத்தி பின் இவர்களின் வழியில் பிறக்கும் முதல் பெண் குழந்தைக்கு ஆராதனா எனப் பெயரிடவும் எனச் சொல்லி இருந்தது. அவளே இத்தனை நாள் இக்குடும்பத்தின் மீதிருக்கும் பெரிய சாபத்தை போக்க வந்தவள். அவளே இக்குடும்பத்தை தாங்கி நிற்கும் ஆணி வேர். அவளின் பிறப்பு இக்குடும்பத்திற்கு சந்தோசத்தை அள்ளித் தரும்.

அதன் பின் அவளின் வாழ்க்கை ஆற்றைப் போல கண்டிப்பாய் சேர வேண்டிய கடலை இந்த சந்ததியில் சென்றடையும் என்றும், ஆனால் பிறந்தவுடன் அவளின் பெற்றோரோடு சில காலம் சேர்ந்திருக்கலாகாது, அப்படியிருந்தால் அது ஒன்றாய் அக்குழந்தையை பாதிக்கும் இல்லையேல் பெற்றோரை பாதிக்கும் என்று படிமப் படுத்தியிருந்தது.

அதை படித்தவளுக்கு, ஏன் தாத்தா அவ்வாறு செய்தார் எனப் புரிந்தது. நடந்த எல்லாவற்றிற்கும் தான் தான் காரணமென்று அதிகமாய் உறுத்தியது. பொறுமையாய் இருக்கவில்லையோ என மனம் தன்னையே கொட்ட,

அதோடே அப்புத்தகத்தை தொடர்ந்தாள். ஆராதனாவின் இளமைக் காலம் சந்தோசமாய் பறந்தாலும், சில இன்னல்களை சந்திக்க நேரிடும். மீண்டும் பிறவி எடுத்து வந்தாலும் தொடரும் சாபமது. கன்னியாய் கனத்த இதயத்துடனே வாழ்க்கை முடியும். இதையெல்லாம் மாற்ற மூங்கில் காட்டின் அம்மையப்பனே துணை இருக்க வேண்டும். இதைப் படிக்க நேர்ந்தால் அவளின் தேவன் அவளருகில் நெருங்கும் காலம் நெருங்கி விட்டது. இன்னல்களும் இனி தொடரும். விதி இனி அம்மையப்பன் கையில்... என முடிவு பெற்ற தாத்தாவின் படிமப் பனி, பின் இதிலிருந்து பேத்தியை எப்படி காப்பாற்றுவதென ஆராய்வதில் தொடர்ந்தது.

மூங்கில் காடென்பது தற்போது தமிழ்நாட்டின் தென்கிழக்கில் ஒரு தீவிலிருக்கும் வனக்காடு எனக் குறிப்பிடபட்டிருந்தது. அதன் பின் பல குறியீடுகள் சொல்லப்பட்டிருந்தது. அவையெல்லாம் அன்புக்கு புரியவில்லை. மொத்தத்தில் தான் செய்த தவறு இன்று தான் அவளுக்குப் புரிந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் கடவுளை வேண்டிக்கொண்டு அமர்ந்திருந்தவர் அப்படியே கண்ணயர்ந்தார்.

அப்போது, அவளின் கனவில் மதி என்றுமில்லாமல் இன்று பேசினார்.

“அன்பு... எந்தத் தவறையும் நீ செய்யவில்லை... எது நடக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டதோ, அதுவே நடந்தது... ஆடும் அனைவரும் அவனின் கட்டளைகளின் படியே செல்கிறோம்... அதனால் தவறு செய்துவிட்டாயேன்று உன்னை நீயே தண்டித்து கொள்ளாதே...

அதோடு நீயும் தமிழ்நாடு செல்... உன் வருகைக்காய் அனைவரும் காத்திருக்கின்றனர்... சில சமயம் நம் முன்னோர் நமக்கு சொல்லாமல் செய்வது நன்மையாய் இருக்கலாம். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை நமக்கிருக்காது. என்ன இருந்தாலும் நாமும் மிருகங்கள் தானே...

ஆராதனாவின் வாழ்க்கையை அவள் கையில் விட்டுவிடு. தானாய் நடக்கும் வரை தான் நம் கைப்பிடி குழந்தைக்கு தேவைப்படும்... அது போல் தான் இப்பவும்.

## தொடர்கதை...

அவளுக்கு ஏற்ற வயது வந்துவிட்டது...

இந்தத் தலைமுறைக்கு இப்புத்தகத்தை தருவது உன் கடமை. அதோடு அவளின் விருப்பத்திற்கு அவளை விடுவதும் உன் பொறுப்பு... அது தான் உனது இறுதிப் பொறுப்பு... அதன் பின் அவள் வாழ்க்கை அவள் கையில்... மனதைப் போட்டு குழப்பிக் கொள்ளாதே.

உன்னை நீ தண்டித்துக் கொண்டது போதும்... இனியாவது குடும்பத்துடன் சேர்ந்து வாழ்... தனிமை இனி உன்னைக் கொன்று விடும்....

ஆராதனாவைப் பற்றி கவலைப்படாதே... சிவன் துணை நிற்பான்..." என்றதோடு மதியின் குரல் விடைபெற்றது.

அப்படியே அமர்ந்து கண்களில் கண்ணீருடன் உறங்கிக் கொண்டிருந்தவளின் அருகில் வந்திருந்த ஆராதனா, அன்புவின் மடியில் படுத்து,

"அம்மா.... உனக்குப் பிடிக்காது எதுவும் செய்ய மாட்டேன்... நான் சண்டியிடம் வரவில்லையென்று சொல்லிவிடுகிறேன்..." எனச் சொல்ல,

அவளின் பேச்சில் விழித்தவள்,

"அன்னு... நீ உன் விருப்பப்படியே செல்... நானும் இந்தியாவே சென்றுவிடலாமென்று நினைக்கிறேன்..." எனச் சொல்ல ஆராதனாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னம்மா... நான் போகட்டுமா?? இந்தியாவுக்கு நீயுமா???" என்று முழித்துப் பார்க்க,

"அன்னு... என்ன இப்படி பார்க்கிறாய்?? நான் சொல்வது உண்மை தான்... மீதியெல்லாம் மெதுவாய் சொல்கிறேன்... முதலில் நான் நம்ம ஆத்துக்கு போன் செய்து பார்க்கணும். இன்னும் பழைய லேன்ட்லைன் நம்பர் வொர்க் ஆகுதா அப்படின்னு... இல்லை வேற வழியில் தொடர்பு கொள்ளனும்... அதோடு அங்கே செல்ல எல்லா ஏற்பாடும் செய்யணும்... இத்தனை நாள் தொடர்பில்லாமல் இருந்ததே ரொம்ப தப்பு..."

என்று பேசிக் கொண்டே செல்ல,

"அம்மா... ஸ்டாப் இட்... எனிதிங் ஹப்பேன்ட்? வாட்ஸ் ராங்? எனக்கு ஒன்னும் புரியலை..." என உள் புகுந்தாள்.

"ம்ம்..." என பெருமூச்சு விட்டவள்,

"அன்னு... இதை இப்போ சொல்லிப் புரிய வைக்க முடியாது. அதனால் முதலில் சண்டிகிட்ட போக ரெடியா இருக்கேன் அப்படின்னு சொல்லிடு... அதுவும் if you like to go... சரியா..." என்று தலையில் தட்டி விட்டு புன்னகையுடன் எழுந்து சென்றாள்.

ஆராதனாவிற்கு எதுவும் புரியவில்லை. மொத்தத்தில் தாய் சம்மதம் சொன்னது சந்தோசமாய் இருந்ததால், தனது பயணத்தை உறுதி செய்துவிட்டு வேலைகளைத் தொடர்ந்தாள்.

அன்பு இந்தியா செல்ல அனைத்தையும் தயார் செய்து கொண்டிருந்தாள். மதி கனவில் பேசியது அவருக்குத் தெம்பை தந்தது. மதி இருந்த போது அவர் பேசியதை கேட்காமல் போனதால் இப்போது அவரின் கனவுப் பேச்சுக் கூட அன்புவிற்கு பெரிதாய் தெரிந்தது. அதுவும் உண்மையெல்லாம் தெரிய வந்ததில் தன் மேல் குற்ற உணர்வும், தேவையில்லாமல் எல்லாத்தையும் பெரிதாய் செய்தது போல் தோன்ற உடனே தன் சொந்தங்களைச் சென்று பார்க்க வேண்டுமென்று தோன்றியது. தனது புத்தியில்லாத் தனத்தை திட்டிக்கொண்டே திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தாள்.

ஆராதனாவிற்கு தன் தாயின் செய்கைகள் அனைத்தும் புரியாத புதிராய் இருந்தாலும், அவரின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி சந்தோசத்தைத் தர அமைதியாய் இருந்தாள். அவளுக்குமே பல நாளாய் இந்தியாவில் சென்று இருந்துவிட வேண்டுமென்ற ஆசை இருந்ததால், அம்மா சொன்னபோது மறுத்துப் பேசவில்லை. அதோடு இந்தப் பயணத்துடன் ஆராய்ச்சி படிப்பும் முடிவு பெற்று விடுவதால் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. பார்த்துக் கொண்டிருந்த வேலையும் விடப்போவதாய் சொல்லி முன்னறிவிப்பு செய்து விட்டதால்,

கவலையின்றி பயணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள்.

இப்பயணத்தில் அவளோடு மைக் மற்றும் ஜூலி இருவரும் வருகின்றனர். இவர்கள் மூவருமே பள்ளி முதல் கல்லூரி, அதன் பின் வேலையென தொடர்ந்து படித்தவர்கள். அவர்களோடு இந்தியாவில் செட்டிலாகும் முன் இருக்கப்போகும் காலமாதலால் இன்னும் எதிர்பார்ப்போடு இருக்கிறாள்..

இப்படியாய் இரண்டு மாதங்கள் செல்ல, இறுதியாய் இவர்கள் இந்தியா செல்லும் நாளும் வந்து சேர்ந்தது. ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் மகிழ்ச்சி, ஒரு விதத்தில் பயமென தனது பயணத்தைத் தொடங்கினர். பதினெட்டு மணி நேரப் பயணத்திற்கு பின் அவர்கள் சென்னையை வந்தடைந்தனர்.

அங்கே காலடி எடுத்து வைத்ததும், வீசிய தென்றல் காற்று ஆராதனாவை வரவேற்றது.

அன்பு, ”அன்னு... நாம் இன்னைக்கு ஹோட்டலில் தாங்கலாம்... பிறகு வீட்டுக்கு போவோம். சர்பிரைஸா இருக்கட்டும் அப்படின்னு சொல்லலை... அதனால் இந்த நேரத்தில் போறது சரி வராது...” என்றார்.

“சரிம்மா... அதொன்னும் பிரச்சனையில்லை. முதலிலே மைக்கும் ஜூலிக்கும் ரூம் புக் பண்ணி இருக்கு... சோ இன்னைக்கு அங்கேயே நாமும் தங்கிடலாம்... நாளைக்குப் பார்க்கலாம்...” எனச் சொல்லிவிட்டு ட்ராலியைத் தள்ளிக் கொண்டே நடந்தாள்.

ஈ.சீ.ஆர். ரோட்டில் கடலோரத்தில் இயற்கை சூழலில் அமைந்த ஹோட்டலைச் சென்றடைந்தனர். மற்ற மூவரும் ஓயவெடுப்பதாய் சொல்ல, ஆராதனா தான் இங்கே சுற்றிப் பார்ப்பதாய் சொல்லி கிழே இருந்த தோட்டத்துக்கு வந்து சேர்ந்தாள்.

தோட்டத்தோடு ஒட்டிய நீச்சல் குளத்துக்கு அருகில் நிலவொளியோடு கூடிய மஞ்சள் வெளிச்சத்தில் பிறை நிலவை ரசித்தபடி சென்றவள், கிழே கிடந்த பைப்பை பார்க்காமல் நடக்க, தடுக்கி கிழே விழப் போக,

“அப்பா...” என்று கத்தியவளை, விழாமல் பிடித்தான் ஆதித்தன்.

**(கி. பி. 600)**

“அம்மையப்பா... என்னை காப்பாற்று...” என்று விழுந்தவளை தூக்கிப் பிடித்த ஆதித்தன், உடனே தனது சக்தியால் அவளைச் சுற்றி ஒரு மாயவலையை ஏற்படுத்தி மற்றவர் கண்ணுக்கு அவர்களைத் தெரியாமல் படுத்தினான்.

அதோடு தப்பு செய்யும் நோக்கத்துடன் உள்ளே வந்தவர்களை தண்டிக்கும் வகையில் அவர்கள் அனைவருக்கும் உடல் முழுதும் எரியும் படி செய்துவிட்டு, அந்த இடத்தை விட்டு ஆராதனாவை தூக்கிக் கொண்டு மறைந்தான்.

அவளைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் அனைவரும் எரிச்சலோடு, அவளையும் காணாமால் அந்தந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தனர்.

ஆராதனாவைத் தூக்கிச் சென்றவன், மலையோடு ஒட்டிய அருவிக்கரையில் கிடத்தி, தண்ணீர் பருக வைக்க நினைத்து அருவியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்து நினைவைக் கொண்டு வர நினைத்துச் செய்ய, அவளின் முகத்தைத் திருப்பிப் பார்த்தவனின் கைகள் கூட வேலை செய்யாமல் அப்படியே நின்றது.

ஆம்... அப்படியொரு ஒளி பெற்ற முகம். கார் இருட்டிலும் ஒளி தரும் வசியம் கொண்ட முகம்... இத்தனை ஆண்டு வாழ்க்கையில் இப்படியொரு ஈர்ப்பை அவன் பெற்றதில்லை. இதற்கு முன் பல பேரைக் காப்பாற்றி இருக்கிறான்... பல பெண்களைச் சந்தித்து இருக்கிறான். ஆனால் பார்த்தவுடன் பதிந்த உருவம் இது தான். பால் நிலவின் பாதி ஒளி கூட அவள் முகத்தில் பட்டால் வெண்ணிற மேகம் போல் பரந்து விரிந்து ஒளி வீசும். அவளின் முகத்தில் சுடர் விட்ட கருணையும், திரண்ட கூந்தலின் மணமும் அவனை மயக்கச் செய்தது. இத்தனை நாள் அவன் காத்துக் கொண்டிருந்தது இந்த தேவதைக்காய் தானோ...!! என மனம்

ஏங்கியது. ஆனால் அவனின் கடமை உணர்வு காதலை கட்டுப்படுத்த, நீரைக் கொடுத்து மயக்கத்தைத் தெளித்தான்.

மயக்கம் தெளிந்தவள், ஒரு ஆணின் கையில் இருப்பதை பார்த்தவுடன் அவசரமாய் விலகி நிற்க, ஆதித்தன் அவள் மறைத்த வெட்கத்தைக் கண்டு தெரியாமல் சிரித்தான்.

சிறிது நேரம் இருவரும் பார்வையால் பார்த்தும் பார்க்காது போல் பார்த்துக் கொண்டே நிற்க, இறுதியாய் ஆராதனா வாய் திறந்தாள்.

"ம்ம்... காப்பாற்றியதற்கு மிக்க நன்றி..." என்று சொன்னவள், பின் என்ன சொல்வதென்று தெரியாமல்,

"நீங்கள் யார்..." எனக் கேட்க,

"நான் யாரென்று அவசியம் உனக்குத் தெரிய வேண்டுமா?" என மறுகேள்வி கேட்டான்.

அவள் என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்க,

அவன் அவள் படும் பாட்டை பார்த்து ரசித்துக் கொண்டே,

"நான் ஆதித்தன்... இந்தக் காட்டை பாதுகாப்பவன்..." என்று சொல்ல,

"ஓ... அப்போது நீங்கள் பெரிய போர் வீரரா... அதனால் தான் எளிதாய் அவர்களை வெல்ல முடிந்ததா?? ஆனால் அவர்கள் அனைவரும் உங்களோடு சேர்ந்தவர் தானே...? எப்படி நீங்கள்..." எனக் கேட்டுக் கொண்டு பார்க்க,

"நீ சொல்வது ஒரு வகையில் உண்மை... ஆனால்..." என நிறுத்தியவன்,

"உன் பெயரென்ன?? நீ எப்படி இங்கே இவர்களிடம் மாட்டினாய்?" எனத் தெரியாது போல் கேட்டான். ஆம்... அவன் சக்தியை கொண்டு அறிய முடியாதது எதுவுமில்லை... இருந்தும் கேட்டான்.
அவன் கேட்டதும் அவள் முகம் சோர்வடைந்தது. பின், "நான்..." என ஆரம்பித்து எப்படி அவள் மாட்டினாள் என்பது வரைச் சொன்னவள், இனி என்ன செய்ய போகிறேன் என நினைத்துக் கொண்டே முடித்தாள்.

"ஓ... அப்படியென்றால் உன்னைச் சிறை பிடித்தது இந்நாட்டின் இளவலோ?" என யோசிக்க ஆரம்பித்தான் ஆதித்தன்.

"ஆம்..." என தலையாட்டியவள், இனியெப்படி வீடு செல்வது, தன்னை ஏற்பரோ என யோசித்தாள்.

அவள் சிந்தனையைக் கண்டதும், "ஆராதனா... மனதில் எதைப் பற்றியும் நினைத்து கவலை கொள்ளாதே... உன் வீட்டில் கண்டிப்பாய் உன்னை மதித்து ஏற்பர்..." எனச் சொல்லவும்,

அவள் மெல்லிய புன்னகையுடன், "நன்றி! அப்படித்தான் நானும் நம்பிக்கை கொள்ள வேண்டும்" என்று சொல்லியபடி அமர்ந்தாள். அவளின் மனம் வீரவர்மன் சொல்லியவற்றை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. ஒருவேளை அவன் சொல்வது போல் தன் பெற்றோர் அவளை ஏற்கவில்லையெனில் என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவள் முகம் காட்டிய வேதனையை ஆதித்தன் பார்த்தவுடன், அவன் மனம் வேதனையடைந்தது.

உடனே, தன் சக்தியைக் கொண்டு அவ்விடத்தை வெளிச்சப்படுத்தினான். மரங்களையும் செடி கொடிகளையும் மகிழ்ச்சியாய் இருக்க ஏவினான்.. பறவைகளை ராகங்கள் இசைக்கச் சொல்லி கட்டளையிட்டான்.

கண்களை மூடி இருந்தவள், பறவைகளின் சத்தம் கண்டு எழுந்தவள், அவ்விடத்தின் தெய்வீகத் தன்மை கண்டு மெய்மறந்தாள். அப்படியொரு அழகிய வனத்தை இதுவரை அவள் பார்த்ததில்லை. அதுவும் பறவைகளின் ரீங்காரம் அவள் கவலையை போக்கவல்லது போன்று இருந்தது. ஒவ்வொரு இடத்தையும், மலர்ந்த பூக்களையும், ஒளிரும் மரங்களையும்

## தொடர்கதை...

பார்த்தவள், சலசலவென பாயும் அருவியைப் பார்க்க, அருவியின் உள்ளேயிருந்து வெளியே வந்தான் ஆதித்தன்.

அப்போது தான் முதல் முறை வெளிச்சத்தில் அவனைப் பார்த்தாள். ஆறடி உயரம். திடகாத்திரமான உருவம். எங்கேயும் சதை போட்டு காணப்படவில்லை. பட்டு தரித்து முத்தும் பவளமும் மாலைகளாய் கழுத்தில் இடப்பட்டு இருக்க, சந்தனமும், வீபூதியின் மனம் கலந்து வீச முகத்தில் ஒரு வீத ஈர்ப்பைக் கொண்டு வந்திருந்தான். கருப்பாய்... இல்லை இல்லை... மாநிறமாய் இருந்தாலும் களையாய் இருந்தவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது.

முதல் முறை பார்க்கும் ஒரு ஆடவனை இப்படியா பார்ப்பதென மனம் இடித்துரைத்தாலும், அவளின் கண்கள் பார்வையை விலக்கவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுமே அவளையே பார்த்துக் கொண்டு வந்தான்.

கைகளில் பூக்களை கொண்டு கீரிடம் போல் தரித்தவன், அதை அவளின் தலையில் வைத்துவிட்டு,

“ஆராதனா... எதற்காகவும் கவலை கொள்ளாதே... இதோ... இப்போது இந்த இடத்தின் அரசி நீதான்... இதோ... இங்கே சேவகன் உனக்காய் சேவை செய்ய காத்திருக்கிறான்....” எனக் கூறி பாதி குனிந்து தனது வணக்கத்தை செலுத்த, அவள் அப்படியே அசையாமல் சிலையாய் நின்றாள். என்ன செய்வதென தெரியாமல் விழித்தவளை, அழைத்துக் கொண்டு, பூக்களையும் மரத்தையும் கொண்டு செய்த ஆசனத்தில் அமரச் செய்தவன்,

“தேவியே... உங்கள் கவலைகளை மறக்க நம் நாட்டின் பிரஜைகள் ஆடல் பாடல்களை ஏற்பாடு செய்திருக்கின்றனர்... அதை ரசிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்” எனச் சொன்னதும்,

“என்ன?” என்பது போல் அவள் பார்க்க, பறவைகளும், முயல், மான் போன்றவையும் அங்கே வந்து ஆடியது. அதோடு பறவைகளின் ஓசை அவளின் மனதைக் கொள்ளை கொண்டது.

கொண்ட கவலைகள் அனைத்தும் மறந்து அங்கே பறவைகளையும் விலங்குகளையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கவலைகள் விலகியதாலோ என்னவோ, அவளின் முகம் தெய்வீகத்தைக் கொண்டிருந்தது. அதை பார்த்துக் கொண்டே இருந்தான் ஆதித்தன். அவனின் மனம் இத்தனை நாள் தனிமையைக் கண்டு வருந்தியதில்லை. ஆனால் இப்போது ஆராதனா அவனை விட்டு சென்றுவிட்டால் என்ன செய்வது என வருந்தியது.

இருந்தும் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். அவள் இருக்கும் வரை அவளை சந்தோசமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்று.
அவனின் கண்கள் அவளை விட்டு செல்லவில்லை... வானத்தின் தேவதையாய் தோன்றியவளை கண்களில் சிறை எடுத்துக் கொண்டிருந்தான். ரசித்துக் கொண்டிருந்தவள் திரும்பி அவனைப் பார்க்க, நிலவொளியில் சூரியனாய் இருந்தவனின் மெல்லிய புன்னகை மயக்க, அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மற்றவை யாவும் மனதை விட்டு மறைய, அவனின் உருவம் மட்டும் உருக் கொள்ள, பறவைகளின் மயக்கும் ஓசை, அவளை இவ்வுலகை விட்டு செல்லச் செய்தது. இருவருமே தங்களைச் சுற்றியுள்ளதை மறந்து தங்கள் மனதைக் கொண்டு பயணித்தனர்.

அங்கே அவள் தன்னை மறந்திருக்க, இங்கே வீரவர்மன் கோபக்கடலில் கொதித்துக் கொண்டிருந்தான். அவனால் மூங்கில் காட்டினுள்ளே போக முடியவில்லை. சென்றவர்களாலும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. முதல் முறை தோல்வி... அதுவும் ஒரு பெண்ணிடம் என்பது அவனை மூர்க்கனாய் மாற்றியது. அடிபட்ட வேங்கையாய் சீறிக் கொண்டிருந்தான்.

நிலவு மலரும்...






# February Month Contest Winners

### 1. Penmai Special Contest:

### Valentine's Day Contest - Mary Daisy




### 2. Neeya Naana Winner - Ramya & Dania




### 3. Penmai's Super Star:

### Best Contest Winner - Geetha A




# March Month Contest

### Penmai's Special Contest - Women's Day Contest

**Neeya Naana - March Month contest.**
**இன்றைய சூழலில் பெண்களின் பாதுகாப்பின்மைக்கு யார் காரணம். சமூகமா? அல்லது அரசாங்கமா?**

**Penmai's Super Star of the Month.**
**Penmai Panel** will select the best player of Penmai every month, it may be like, **Best Motivator, Best Poet, Best writer, Best Creator, Best Adviser etc. You can play any role like this, the thing you have to do is to give your best.**

For Advertisements Please Contact

support@penmai.com or
call us at 8344 143 220

Submit your works
or questions to

Penmai.com

Write us
your feedback to

admin@penmai.com

For advertisement
please contact

8344 143 220